# மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

முன்னிலை: **திரு.பா.சரவணன், B.Sc., B.L.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

## அமர்வு வழக்கு எண்.227/2021

(CNR No: TNTP01-000223-2021)

(இவ்வழக்கு, மணப்பாறை, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.2/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் மேல்விசாரணைக்காக திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, இவ்வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது.)

தமிழ்நாடு அரசுக்காக;
காவல் ஆய்வாளர்,
துவரங்குறிச்சி காவல் நிலையம்,
குற்ற எண்.48/2020. ... குற்றமுறையிடுபவர்

/எதிராக/

சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ்,
வயது 41/2026,
த/பெ.பெரியய்யா,
கம்பிளியம்பட்டி,
நத்தம் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம். ... எதிரி

| | | |
|---|---|---|
| முதல் நிலை பதிவேட்டு வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 06.09.2021 |
| எதிரிக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு பிரிவுகள் | : | எதிரி மீது இதச சட்டப்பிரிவு 302 படி. |
| மேற்படி எதிரிக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | : | **குற்றச்சாட்டு: ( எதிரி மீது):** எதிரியின் மனைவிக்கும், பழனிச்சாமி என்பவருக்கும் கள்ளத்தொடர்பு இருப்பதாக சந்தேகப்பட்டதால் எதிரியின் மனைவி மனவருத்தம் அடைந்து தங்கள் பெற்றோர் வீட்டுக்கு சென்றுவிட்டதனாலும், எதிரியின் மனைவியை சமாதானம் செய்ய அழைத்தபோது பழனிச்சாமி எதிரியோடு வர மறுத்ததாலும், 16.03.2020 அன்று மாலை சுமார் 5 மணியளவில் பீரங்கி மேட்டில் உள்ள விஜயன் மகன் ஆண்டிச்சாமி வீட்டு முன்பு வைத்து எதிரி அரிவாளால் பழனிச்சாமியின் தலையின் வலது பக்கத்திலும், கழுத்திலும் மாறி மாறி வெட்டி காயம் ஏற்படுத்தி மரணம் விளைவித்ததால் எதிரி இதச பிரிவு 302 ன் படி இந்நீதிமன்றத்தால் தண்டிக்கதக்கதும், விசாரிக்கத்தக்கதுமான குற்றம் புரிந்துள்ளார். |

| | | |
|---|---|---|
| எதிரியின் பதிலுரை | & | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | | எதிரி இதச பிரிவு 302 ன் கீழ் குற்றவாளியென தீர்மானிக்கப்படுகிறது. |
| தண்டனை அல்லது உத்தரவு | | எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 302–ன் கீழான குற்றச்சாட்டு, அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்யப்படுகிறது.<br>எனவே. எதிரி இதச பிரிவு 302 –ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, கு.வி.மு.ச. 235(2)/258(2)BNS ன்படி, அவருக்கு வழங்க இருக்கும் தண்டனை பற்றி வினவி, எதிரியின் கோரிக்கையை பரிசீலித்து, எதிரி மீது நிரூபிக்கப்பட்ட, இதச பிரிவு 302 கீழான குற்றத்திற்காக, எதிரிக்கு **கடுங்காவல் ஆயுள் சிறைத்தண்டனையும்,**மேலும், **ரூ.5000/–** அபராதமும் தண்டனையாக விதிக்கப்படுகிறது. மேற்படி, அபராதத் தொகையை எதிரி செலுத்த தவறினால் அவர் கூடுதலாக **6** மாதங்கள் கடுங்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டுமென கு.வி.மு.ச. 235(2)/258(2)BNS– |

| | | |
|---|---|---|
| | | ன்படி உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ. 5000/-.<br><br>3) இந்த வழக்கில், எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த காலத்தை, கு.வி.மு.ச. பிரிவு 428/468 BNS-ன் கீழ் கழித்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. |
| பிணைப்பத்திரிங்கள் தொடர்பான உத்தரவு | : | இவ்வழக்கில் எதிரி தரப்பில் பிணைப்பத்திரம் ஏதும் எழுதி தரப்பட்டிருந்தால், அவற்றை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |
| வழக்கு சொத்துக்கள் தொடர்பான உத்தரவு | : | அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.6 ஆகியவற்றை மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு, அழிக்க உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தடயப்பொருளான PY 01 BP 9270 என்ற பதிவெண் கொண்ட கருப்புநிற பல்சர் இருசக்கர வாகனத்தை ஏற்கனவே மணப்பாறை, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில், அதன் பதிவு உரிமையாளர் CRLMP.1589/2020 மூலம் நாள் 21.08.2020 அன்று பிணைப்பத்திரம் எழுதிக் கொடுத்து இடைக்காலமாகப் பெற்றுச் சென்றுள்ளதால் |

| | | |
|---|---|---|
| | | அதனை அவரே வைத்துக்கொள்ளவும் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் பிணைப்பத்திரத்தை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இதுநாள்வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 04.06.2026 தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.A. ஆனந்தன் அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு A.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

**01) <u>இவ்வழக்கின் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு : –</u>**

இவ்வழக்கின் புகார்தாரர் ஆண்டிச்சாமி, மருங்காபுரி தாலுகா, பிடாரம்பட்டி, பீரங்கி மேட்டில் குடியிருப்பதாகவும், இவர், இவ்வழக்கில் கொலை செய்யப்பட்டு இறந்துபோன பழனிச்சாமி என்பவரின் அப்பா என்றும், எதிரியும், பழனிச்சாமியும் நெருக்கிய உறவினர்கள் என்றும், அந்தவகையில், பழனிச்சாமி அடிக்கடி எதிரியின் வீட்டிற்கு வருவது வழக்கமாக இருந்து வந்ததாகவும், அதன் காரணமாக, எதிரி தமது மனைவிக்கும், பழனிச்சாமிக்கும் தகாத உறவு

இருப்பதாக சந்தேகப்பட்டு வந்தததாகவும், எதிரி தன்னை சந்தேகப்பட்டு பேசியதால் கோபித்துக்கொண்டு, எதிரியின் மனைவியான சாட்சி செல்லமணி அக்கியம்பட்டியிலுள்ள அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக, 16.03.2020ம் தேதி மாலை சுமார் 5.00 மணிக்கு பீரங்கிமேடு விஜயன் என்பவரின் மகன் ஆண்டிச்சாமி என்பவர் வீட்டு முன்பு கருப்பு நிற பல்சர் மோட்டர் சைக்கிள் பதிவு எண் PY 01 BP 9270 என்ற இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி பழனிச்சாமியிடம், தன்னுடன் வந்து தனது மனைவியை சமாதானம் செய்து வைக்க உதவுமாறு கேட்டதற்கு, பழனிச்சாமி அவருடன் செல்ல மறுத்ததாகவும், ஏற்கனவே, பழனிச்சாமி மீது விரோதத்தில் இருந்தததால் கடும் ஆத்திரமடைந்த எதிரி தன் பையிலிருந்த அரிவாளை எடுத்து பழனிச்சாமியிடம் காட்டி என் மனைவியை கூப்பிட வர மறுத்தால் உன்னை வெட்டிக் கொன்று விடுவேன் என்று கூறிய போதும், பழனிச்சாமி அவருடன் வர முடியாது என்று மறுத்துவிட்டு அங்கிருந்து சென்றபோது, எதிரி அவரை பின் தொடர்ந்து சென்று உன்னால் தாண்டா என் குடும்பம் கெட்டு போச்சு இத்தோடு செத்து தொலைஞ்சு போடா என்று சொல்லிக்கொண்டே அரிவாளால் பழனிச்சாமியின் தலைப்பகுதியில் மாறி மாறி வெட்டியதால், பழனிச்சாமிக்கு தலையின் வலது புறம், கழுத்து ஆகிய இடங்களிலும், இடது முன்னங்கையிலும் மரண காயங்களை ஏற்படுத்திவிட்டு, அங்கிருந்து தனது இருச்சக்கர வாகனத்தில் தப்பி ஓடிவிட்டதாகவும், மரண காயங்கள்பட்ட பழனிச்சாமி துவரங்குறிச்சி, அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு

சேர்க்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக திருச்சி, அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு தீவிர சிகிச்சை பலனின்றி 16.03.2020ம் தேதி இரவு 09.00 மணிக்கு பழனிச்சாமி தனது தலையிலும், கழுத்திலும் ஏற்பட்ட மரண காயங்களின் விளைவாக இறந்துவிட்டதாகவும், எனவே, எதிரி மீது இதச சட்டப்பிரிவு 302–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தை புரிந்துள்ளார் என்று அரசுத்தரப்பில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02) இந்த வழக்கானது முதலில் 06.09.2021 ஆம் தேதி வழக்கு கோப்பானது முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.2/2021 ஆக மணப்பாறை, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச. 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது சட்டப்பிரிவு 302 இதச கீழான குற்றச்சாட்டு என்பதால், வழக்கு கோப்பினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு, மணப்பாறை, நீதித்துறை நடுவர் அவர்களால் மேல் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், இந்த வழக்கு கோப்பானது, மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.227/2021 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கானது 30.11.2021ம் தேதியன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

03) எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர், இருதரப்பும் கேட்கப்பட்டு, இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக பின்வரும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

3(1) **குற்றச்சாட்டு: (எதிரி மீது):**

எதிரியின் மனைவிக்கும், பழனிச்சாமி என்பவருக்கும் கள்ளத்தொடர்பு இருப்பதாக சந்தேகப்பட்டதால் எதிரியின் மனைவி மனவருத்தம் அடைந்து தங்கள் பெற்றோர் வீட்டுக்கு சென்றுவிட்டதனாலும், எதிரியின் மனைவியை சமாதானம் செய்ய அழைத்தபோது பழனிச்சாமி எதிரியோடு வர மறுத்ததாலும், 16.03.2020 அன்று மாலை சுமார் 5 மணியளவில் பீரங்கி மேட்டில் உள்ள விஜயன் மகன் ஆண்டிச்சாமி வீட்டு முன்பு வைத்து எதிரி அரிவாளால் பழனிச்சாமியின் தலையின் வலது பக்கத்திலும், கழுத்திலும் மாறி மாறி வெட்டி காயம் ஏற்படுத்தி மரணம் விளைவித்ததால் எதிரி இதச பிரிவு 302 ன் படி இந்நீதிமன்றத்தால் தண்டிக்கதக்கதும், விசாரிக்கத்தக்கதுமான குற்றம் புரிந்துள்ளார் என குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

4) இந்த எதிரி மீது இதச சட்டப்பிரிவு 302–ன் படி குற்றச்சாட்டு வனைந்து, தமிழில் படித்துக் காட்டி, விளக்கி வினவியபோது, எதிரி தம்மீதான குற்றச்சாட்டை மறுத்தும், தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். அதனால் சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

## 05) அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம் :–

அரசு தரப்பில் சாட்சிகள் ஆண்டிச்சாமி, அடைக்கம்மாள், பாலமலை, பழனிச்சாமி, பாலமுருகன், பழனி, மருத்துவர் பிரபாகரன், கிராம நிர்வாக அதிகாரி சிவராஜ், மருத்துவர் கனகஸ்ரீ, ஆசியா முதல்நிலைக்காவலர், மருத்துவர் வினோதா, ஆனந்தராஜ் இரண்டாம் நிலைக்காவலர், உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் , ஆய்வாளர் ஜெயதேவி, ஆய்வாளர் பாலாஜி ஆகியோர்கள் முறையே அ.சா.1 முதல் அ.சா.15 வரையிலான சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு, புகார் வாக்குமூலம், பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர், விபத்து பதிவேடு, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி, கைப்பற்றுதல் மகசர், கிராம நிர்வாக அதிகாரியின் அறிக்கை, பிரேத பரிசோதனை அறிக்கை, விசரா அறிக்கை, இறுதி கருத்துரை, விபத்து பதிவேடு, முதல் தகவல் அறிக்கை, மாதிரி வரைபடம், சட்டபிரிவு மாற்று அறிக்கை, பிரேத விசாரணை அறிக்கை, படிவம் 91 (2 எண்ணிக்கை), வேதியியல் அறிக்கை, பயாலஜி அறிக்கை, செராலஜி அறிக்கை ஆகியவை அ.த.சா.ஆ.1 முதல் 19 வரையிலான சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளன. அருவாள்–1, இரத்தம் படிந்த மண் சிறிதளவு, இரத்தம் படியாத மண் சிறிதளவு, இரத்தக்கறை படிந்த வெள்ளை 1/2 கை சட்டை–1, கிழிந்த ஊதா வெள்ளை கட்டம் போட்ட கைலி–1 இரத்தக்கறை படிந்த வெள்ளை கலர் சட்டை–1 ஆகியவை சா.பொ.1 முதல் சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சி பழனிவேல் என்பவர்

சாட்சியாக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

## 06) அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:

07) அ.சா.1 ஆண்டிச்சாமி தனது சாட்சியத்தில், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமை தெரியும் என்றும், தனது மகன் பெயர் பழனிசாமி என்றும், இந்த வழக்கில் இறந்துபோனது தனது மகன் பழனிசாமி தான் என்றும், அவர் டேங்கர் லாரியில் ஓட்டுனர் வேலை செய்து வந்தார் என்றும், தனது மனைவியின் பெயர் அடைக்கம்மாள் என்றும், தன் மனைவியின் அக்கா பெயர் நாச்சம்மாள் என்றும், நாச்சம்மாளின் வீடு அம்புலிபட்டியில் உள்ளது என்றும், தன் மகன் லாரியில் ஓடிவிட்டு தனது வீட்டிற்கு எப்போதாவது வருவார் என்றும், அடிக்கடி நாச்சம்மாள் வீடு உள்ள ஊருக்கும் போவார் என்றும், தன் மகனும், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் உடன் முன்பு ஒன்றாக சேர்ந்து சுற்றினார்கள் என்றும், அவர்களுக்கு ஏதோ பிரச்சனை என்று தெரிந்தது என்றும், அ.சா.1 ஆண்டிச்சாமி தனது சாட்சியத்தில், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன் என்பது தெரியும் என்றும், தனது மகன் பெயர் பழனிசாமி என்றும், இந்த வழக்கில் இறந்துபோனது தனது மகன் பழனிசாமி தான் என்றும், அவர் டேங்கர் லாரியில் ஓட்டுனர் வேலை செய்து வந்தார் என்றும், தனது மனைவியின் பெயர் அடைக்கம்மாள் என்றும், தன் மனைவியின் அக்கா பெயர் நாச்சம்மாள் என்றும், நாச்சம்மாளின் வீடு அம்புலிபட்டியில் உள்ளது என்றும், தன் மகன் லாரியில்

ஓடிவிட்டு தனது வீட்டிற்கு எப்போதாவது வருவார் என்றும், அடிக்கடி நாச்சம்மாள் வீடு உள்ள ஊருக்கும் போவார் என்றும், தன் மகனும், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் என்பவரும் முன்பு ஒன்றாக சேர்ந்து சுற்றினார்கள் என்றும், அவர்களுக்கு ஏதோ பிரச்சனை என்று தெரிந்தது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

08) அ.சா.1 ஆண்டிச்சாமி மேலும் தனது சாட்சியத்தில், கடந்த 16.03.2020 அன்று மாலை 05.00 மணியளவில் வேலை முடிந்து தானும், தனது மனைவியும் வந்தோம் என்றும், பீரங்கிமேட்டில் தங்கள் பழைய வீட்டருகே எதிரி ஜெயராஜ், தன் மகன் பழனிசாமியும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தனர் என்றும், பாலமுருகனும் அவர்களுடன் உடனிருந்தார் என்றும், எதிரி ஜெயராஜ் அப்போது கருப்புநிற பைக்கில் வந்திருந்தார் என்றும், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் தன் மகனும் சண்டை போட்டதால் தான் ஏதோ சும்மா சண்டை போடுகிறார்கள் என நினைத்துக் கொண்டிருந்தோம் என்றும், அப்போது எதிரி ஜெயராஜ் அவரது பைக்கில் ஒரு அருவாளை வைத்துள்ளார் என்றும், அதை எடுத்து வந்து தன் மகனை தலையின் பின்புறம் வெட்டிவிட்டார் என்றும், தன் மகனை மீண்டும் வெட்ட வந்தபோது கையை நீட்டினார் என்றும், அதில், இடது கையில் வெட்டுப்பட்டு வாட்ச்சுடன் அந்த வெட்டு சரித்துக் கொண்டு போனது என்றும், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் பையை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டதாகவும், சாட்சியமளித்துள்ளார்.

09) அ.சா.1 ஆண்டிச்சாமி மேலும் தனது சாட்சியத்தில், தாங்கள் போய் தன் மகனைதான் பார்த்தோம் என்றும், தன் மகனை சிகிச்சைக்காக துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும், அங்கிருந்துமேல் சிகிச்சைக்காக திருச்சி, அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கு இரவு 09.00 மணியளவில் தன் மகன் இறந்து விட்டதாக சொன்னார்கள் என்றும், திருச்சி, அரசு மருத்துமனையிலிருந்தபோது, துவரங்குறிச்சி போலிசார் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் அதுதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 என்றும், அந்த அருவாளை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் அருவாள்தான் அன்று எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் தன் மகனை தாக்கியதாகும் என்றும், அந்த அருவாள் அதசாபொ.1 என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், தன்னால் அந்த பைக்கை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10) அ.சா.2 அடைக்கம்மாள் தனது சாட்சியத்தில், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜை தெரியும் என்றும், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் தனது அக்கா மகன் என்றும், இந்த வழக்கில் இறந்துபோனது தனது மகன் பழனிசாமி என்றும், தன் மகன் லாரி டிரைவராக வேலை செய்தார் என்றும், தன் அக்கா பெயர் நாச்சம்மாள் என்றும், அவர் கம்பளியாம்பட்டியில் வசிக்கிறார் என்றும், டிரைவர்

வேலைக்கு செல்லாமல் தன் மகனை தனது அக்கா அவர் வீட்டில் வேலைக்கு வைத்திருந்தார் என்றும், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ்க்கும், தன் மகனுக்கும் என்ன பிரச்சனை என்றால் எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் தன் மகனை எதிரியின் மனைவியுடன் இணைத்து சந்தேகப்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

11) அ.சா.2 அடைக்கம்மாள் மேலும் தனது சாட்சியத்தில், சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மாலை 05.00 மணியளவில் எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ், அருவாளால் தன் மகனை தலையில் பின்புறம் வெட்டிவிட்டார் என்றும், இடது கையில் வெட்டிவிட்டார் என்றும், எதிரி மூன்று வெட்டு வெட்டினார் என்றும், அந்த சமயத்தில் தான், தன் கணவர், தன் அண்ணன் மகன் பாலமுருகன் ஆகியோர் அந்த இடத்தில் இருந்தோம் என்றும், அந்த பீரங்கிமேட்டில் தங்கள் வீட்டு அருகே உள்ளது என்றும், அந்த அருவாளை பார்த்தால் தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.த.சா.பொ.1 அருவாள்தான் அதுவாகும் என்றும், அதன்பிறகு தன் மகனை துவரங்குறிச்சி ,அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்து சென்றோம் என்றும், அங்கு பார்க்க முடியாது என்று சொல்லி திருச்சி, அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்றும், அங்கு இரவு 09.00 மணிக்கு தன் மகன் இறந்துவிட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12) அ.சா.3 பாலமலை தனது சாட்சியத்தில், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜை தெரியும் என்றும், பார்த்துள்ளேன் என்றும், அசா.1, அ.சா.2 ஆகியோரை தெரியும் என்றும், வழக்கில் இறந்துபோன பழனிசாமி அவர்களது மகன். பழனிசாமியை எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் வெட்டிவிட்டதாக கேள்விப்பட்டேன் என்றும், பழனிசாமி இறந்தபிறகு அவரது உடல் திருச்சி அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது என்றும், தான் மற்றும் ஊர்க்காரர்கள் அங்கு வந்தோம் என்றும், போலிசார் வந்து அவரது பிரேதத்தைப் பார்த்து எழுதினார்கள் என்றும், தாங்கள் கையொப்பம் செய்தோம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13) அ.சா.4 பழனிச்சாமி தனது சாட்சியத்தில், அசா.1, 2, 3 ஆகியோரை தெரியும் என்றும், வழக்கில் இறந்துபோன பழனிசாமி அசா.1ன் மகன் என்றும், பழனிசாமியை எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் வெட்டிவிட்டதாக கேள்விப்பட்டேன் என்றும், பழனிசாமி இறந்தபிறகு அவரது உடல் திருச்சி, அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது என்றும், தான், அசா,1 மற்றும் ஊர்க்காரர்கள் அங்கு வந்தோம் என்றும், போலிசார் வந்து அவரது பிரேதத்தைப் பார்த்து எழுதினார்கள் என்றும், தாங்கள் கையொப்பம் செய்தோம் என்றும், சாட்சியமளித்துள்ளார்.

14) அ.சா.5 பாலமுருகன் தனது சாட்சியத்தில், அ.சா.1 ஆண்டிசாமி தனக்கு அத்தை கணவர் என்றும், அ.சா.2 அடைக்கம்மாள் தனது அத்தை என்றும், வழக்கில் இறந்துபோன பழனிசாமியை தெரியும் என்றும், இறந்துபோன பழனிசாமி தனக்கு அத்தை மகன் என்றும், அவர் அசா,1, அ.சா.2 ன் மகன் என்றும், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் தெரியும் என்றும், அவரும் தனக்கு அத்தை மகன் தான் என்றும், 16.03.2020 அன்று மாலை 05.00 மணியளவில் எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் தன்னை அழைத்து அவரது பல்சர் வண்டிக்கு பெட்ரோல் போட்டு வர சொன்னார் என்றும், தான் பெட்ரோல் போட்டுவிட்டு வந்தபோது பீரங்கிமேடு அருகே எனது ஆண்டிசாமி மாமா வீடு அருகே எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ், பழனிசாமியும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

15) அ.சா.5 பாலமுருகன் மேலும் தனது சாட்சியத்தில், சண்டை நடந்து கொண்டிருந்தபோதே எதிரி சொக்கன் என்கிற சொக்கலிங்கம், அருவாளை எடுத்து பழனிசாமியின் தலையின் பின்புறம் வெட்டிவிட்டதாகவும், பக்கத்திலிருந்த ஆட்கள் வந்தார்கள் என்றும், சொந்தக்காரர்கள் வரவில்லை என்றும், எதிரி சொக்கன் என்கிற சொக்கலிங்கம், வெட்டியதால் பழனிசாமிக்கு பின்தலையில் காயம் இருந்தது என்றும், அவரை ஆம்புலன்ஸ் மூலம் துவரங்குறிச்சி, அரசு மருத்துவமனைக்கு அழைத்து போனோம் என்றும், அங்கிருந்து திருச்சி, அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும்,

அங்கு பழனிசாமி இறந்துவிட்டார் என்றும், ஆயுதத்தைப் பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.த.சா.பொ.1 அருவாளால்தான் எதிரி சொக்கன் என்கிற சொக்கலிங்கம், பழனிசாமியை வெட்டினார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

16) அ.சா.6 பழனி தனது சாட்சியத்தில், 16.03.2020 அன்று மாலை பழனிசாமி என்பவரை எதிரி சொக்கன் என்கிற சொக்கலிங்கம், வெட்டிவிட்டதாக தகவல் கேள்விபட்டு, அங்கு போனோம் என்றும், துவரங்குறிச்சி போலிசார் இரவு 08.00 அல்லது 08.30 மணியளவில் அங்கு வந்தார்கள் என்றும், சம்பவ இடத்தில் ஒரு வரைபடம் வரைந்தார்கள் என்றும், வரைந்து எழுதினார்கள் என்றும், சாட்சி கையொப்பம் போட்டேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.2 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

17) அ.சா.6 பழனி மேலும் தனது சாட்சியத்தில், சம்பவ இடத்தில் இரத்தம் படிந்த மண், இரத்தம்படியாத மண், அரைக்கை சட்டை, ஊதா கைலி ஆகியவற்றையும் போலிசார் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அவை முறையே அ.த.சா.பொ.2 முதல் அ.த.சா.பொ.5 என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும்,

அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.3 என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், மேற்படி விசயங்கள் நடந்தது பிடாரிபட்டியில் உள்ள ஆண்டிசாமியின் வீட்டிற்கு முன்பாகும் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

18) அ.சா.7 டாக்டர் பிரபாகரன் தனது சாட்சியத்தில், தான் தற்சமயம் மணப்பாறை, அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இதற்கு முன்பு கடந்த 16.03.2020 அன்று துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது பழனிச்சாமி என்பவரை உறவினர்கள் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள். காயம்பட்ட பழனிச்சாமி சுயநினைவின்றி இருந்தார் என்றும், உறவினர்கள் தன்னிடம் அடையாளம் தெரியாத நபர் அருவாளால் அவரை 16.03.2020 அன்று மாலை 05.00 மணியளவில் பிடாரிப்பட்டி, பீரங்கிமேடு அருகே வெட்டியதாக சொன்னார்கள் என்றும், அவரை பரிசோதித்து பார்த்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன என்றும், சாட்சியமளித்துள்ளார்.

19) அ.சா.7 டாக்டர் பிரபாகரன் மேலும் தனது சாட்சியத்தில், 1) தலையின் பின்புறத்தில் 20x2x3 cm அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது என்றும், அந்த காயம் தலையின் பின்புறம் கபாலம் வரை வெட்டுக்காயம் இருந்தது என்றும், தலைப்பகுதியில் உள்ள ஆக்சிபிட்டல் பகுதியில் உள்ள எலும்பு முறிந்திருந்தது என்றும், 2) இடது முன்கையில் 5x1x1 cm அளவில்

வெட்டுக்காயம் காணப்பட்டது என்றும், அவரை மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும், தான் வழங்கிய விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.4 என்றும், அருவாள் போன்ற ஆயுதத்தால் ஒரு நபர் அவரைத் தாக்கும்போது அவருக்கு மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றும், மேற்படி காயத்தால் அந்த நபருக்கு இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு என்றும், சாட்சியமளித்துள்ளார்.

20) அ.சா.8 சிவராஜ் தனது சாட்சியத்தில், தான் தற்சமயம் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், வீரபாண்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இதற்கு முன்பு மருங்காபுரி வட்டம், இக்கரைகோசிகுறிச்சி கிராம நிர்வாக அலுவலராக 17.03.2020 அன்று பணியிலிருந்தபோது தனது உதவியாளராக இளங்கோவன் என்பவர் இருந்தார் என்றும், அன்று அலுவலகத்தில் இருந்தபோது மதியம் 12.15 மணிக்கு ஒருவர் தங்களிடம் வந்தார் என்றும், அவரை விசாரித்தபோது சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் என்று சொன்னார் என்றும், எதிரி தான் அவர் என்றும், தங்களிடம் பீரங்கிமேடு ஆண்டிசாமி வீட்டிற்கு முன்பாக பழனிச்சாமி என்பவரை அருவாளால் 16.03.2020 அன்று மாலை 05.00 மணியளவில் வெட்டிவிட்டதாகவும், அந்த காயத்தின் காரணமாக அந்த நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டதாகவும், அவர் இறந்து விட்டதாகவும், தான் காவல்துறைக்கு போனால் அடித்துவிடுவார்கள் என்று பயந்துகொண்டு

என் முன்பாக ஆஜராவதாக சொன்னார் என்றும், அவரை தானும், தனது உதவியாளரும் அழைத்து சென்று துவரங்குறிச்சி காவல்நிலையத்திற்கு சென்றோம் என்றும், அங்கு ஆய்வாளர் முன்பாக அவரை ஆஜர்படுத்தினோம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

21) அ.சா.8 சிவராஜ் மேலும் தனது சாட்சியத்தில், ஆய்வாளர் எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன் கைது செய்து தங்கள் முன்பு விசாரித்தார் என்றும், அப்போது எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன், நடந்த சம்பவத்தைப் பற்றி அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறினார் என்றும், மேலும் தன்னை அழைத்து போனால் கம்பிளியம்பட்டியில் உள்ள தனது தோட்டத்தில் உள்ள மாட்டு கொட்டகையில் மறைத்து வைத்திருந்த அருவாளையும், ஒரு கருப்பு கலர் பல்சர் வண்டியையும், இரத்தக்கறை படிந்த சட்டையையும் எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், அதில் எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன் கையொப்பம் செய்ததாகவும், தானும், தனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.5 என்றும், சிவப்பு மையினால் அடிகோடிட்ட பகுதி மட்டும், அடைப்புகுறிக்குள் உள்ள பகுதி நீங்கலாக என்றும், பின்பு எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன் மற்றும்

போலிசார், உதவியாளருடன் கம்பிளியாம்பட்டிக்கு சென்றோம் என்றும், அப்போது மதியம் 02.30 மணி இருக்கும் என்றும், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன், அவரது மாட்டுக் கொட்டகையில் சொருகியிருந்த அருவாளை எடுத்து ஆஜர் செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

22) அ.சா.8 சிவராஜ் மேலும் தனது சாட்சியத்தில், மேலும் எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன், ஒரு கருப்பு கலர் பல்சரையும், இரத்தக்கறை படிந்த வெள்ளைகலர் சட்டையையும் ஆஜர் செய்தார் என்றும், அவற்றை ஆய்வாளர் தங்கள் முன்பாக ஒரு மகசரில் கைப்பற்றினார் என்றும், அந்த அருவாள் தன்னிடம் காட்டப்படும் அதசபொ.1 தான் என்றும், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன், ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த வெள்ளைக்கலர் சட்டை என்னிடம் காட்டப்படுவதுதான் என்றும், அது அதசாபொ.6 என்றும், அந்த கருப்பு பல்சர் பைக்கின் பதிவு எண்.PY 01 BP 9270 என்றும், ஆய்வாளர் கைப்பற்றிய மகசர் தன்னிடம் காட்டப்படுவதுதான் என்றும், அதில் தானும், தனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ.6 என்றும், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன், காவல்நிலையத்தில் ஆஜர் செய்யும்போது தான் ஒரு அறிக்கை தயாரித்து ஆய்வாளரிடம் கொடுத்தேன் என்றும், அந்த அறிக்கை அதசாஆ.7 என்றும், சாட்சியமளித்துள்ளார்.

23) அ.சா.9 கனகஸ்ரீ தனது சாட்சியத்தில், தான் தற்பொழுது புதுக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் உடலியங்கியல் துறையில் போதகராக பணியாற்றுகிறேன் என்றும், கடந்த 17.03.2020 அன்று திருச்சி கிஆபெவி. அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் போதகராக பணியிலிருந்தபோது துவரங்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.48/2020 என்ற வழக்கில் சம்பந்தப்பட்டு இறந்துபோன பழனிச்சாமி, 23 வயது ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதத்தைப் பெற்று பெண் காவலர் 1400 ஆசியா என்பவர் பிரேதத்தை அடையாளம் காண்பித்தார் என்றும், அதன் அங்க, மச்ச அடையாளங்களைக் குறித்துக் கொண்டு அன்றையதினம் பிற்பகல் 04.05 மணிக்கு பிரேத பரிசோதனையை துவங்கினேன் என்றும், அதன் விபரங்கள் பின்வருமாறு என்றும் சாட்சியமளித்துள்ளார்.

24) அ.சா.9 கனகஸ்ரீ மேலும் தனது சாட்சியத்தில், பிரேதத்தில் விறைப்பு தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது என்றும், பிரேதம் குளிரூட்டப்பட்ட அறையில் வைக்கப்பட்டிருந்தது என்றும், நடுத்தர உடல்வாகுடைய ஆண் பிரேதத்தில் மூச்சு விடுவதற்கு உதவி செய்ய மூச்சுகுழாயில் மருத்துவக்கருவி கழுத்து வழியாக பொருத்தப்பட்டிருந்தது என்றும், ஊசி குத்திய காயம் வலது முன் கையில் காணப்பட்டது என்றும், சிறுநீர் குழாய் பொருத்தப்பட்டிருந்தது என்றும், அறுவை சிகிச்சை மூலம் உண்டாகிய கிழிந்த காயம் 3x1 மூச்சு குழாய்

அளவு கழுத்தின் நடுப்பகுதியில் டிரக்கியாஸ்டமி–க்காக இருந்தது என்றும், பிரேதத்தில் இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் : 1) தையல் போடப்பட்ட கிடைமட்டமான எலும்பு ஆழ காயம் 15x12 cm அளவில் (12 தையல்கள்) தலையின் பின்புறம் இருந்தது என்றும், காயத்தின் ஓரங்கள் சீராக இருந்தன என்றும், காயத்தைக் கூராய்வு செய்ததில், 18x10 cm அளவில் தலையின் பின்பகுதியில் உள்ள தலைத்தோலில் இரத்தக்கசிவு காணப்பட்டது என்றும், 16 செமீ அளவில் கிடைமட்டமான எலும்பு முறிவு கபால பின் எலும்பில் இரத்தக்கசிவுடன் காணப்பட்டது என்றும், மூளைச்சவ்வில் இரத்தக்கசிவு மூளையின் பின் மடல்களிலும், சிறு மூளையைச் சுற்றிலும் காணப்பட்டது என்றும், 2) 3x2x எலும்பு வரையிலான ஆழம் செங்குத்தான வெட்டுக்காயம் வலது காதின் பின்புறம் காணப்பட்டது என்றும், அதன் ஓரங்கள் சீராக இருந்தன என்றும், 5X3 cm அளவில் காதை சுற்றியுள்ள தலைத்தோலின் அடியில் இரத்தக்கசிவு காணப்பட்டது என்றும், 3) 4x2 தசை ஆழம் வெட்டுக்காயம் இடது முன்கையின் பின்புறமாக அதன் கீழ்பகுதியில் காணப்பட்டது என்றும், காயத்தின் இரு ஓரங்களும் சீராக இருந்தன என்றும், 4) சிவந்த பழுப்பு நிற சிராய்ப்பு காயங்கள் கீழ்கண்ட இடங்களில் காணப்பட்டன என்றும், – 3x2cm அளவில் வலது கண்ணின் வெளி ஓரத்திலும் – 1x0.5 cm அளவில் செங்குத்தாக வலது முன்கையின் நடுப்பகுதியிலும் – 9x2 cm அளவில் சாய்வாக வலது முட்டியின் மேல் பகுதியிலும் – 6x5 cm அளவில் வலது முட்டியின் முன்புறத்திலும் – 4x1 cm அளவில் இடது காலின் மேல் பகுதியிலும் – 2x1 cm

அளவில் இடது முட்டியின் முன் பகுதியிலும் காணப்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

25) அ.சா.9 கனகஸ்ரீ மேலும் தனது சாட்சியத்தில், மற்ற விபரங்கள் பிறப்புறுப்புகள் இயல்பு நிலையில் இருந்தன என்றும், இருதயம் இயல்பு நிலையில் இருந்தன என்றும், இருதய அறையில் திரவ இரத்தம் இருந்தது என்றும் இருதய இரத்த நாளங்கள் இயல்பு நிலையில் இருந்தன என்றும் நுரையீரல்கள் இயல்பு நிலையில் இருந்தன என்றும், அதன் வெட்டுத் தோற்றம் இயல்பு நிலையில் இருந்தது என்றும், கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் வெளிறி காணப்பட்டன என்றும், அதன் வெட்டுத் தோற்றத்தில் இயல்பு நிலையில் இருந்தது என்றும், குரல்வளை மற்றும் மூச்சுக்குழாய் இயல்பு நிலையில் இருந்தது என்றும், நாவடி எலும்பு இயல்பு நிலையில் இருந்தது என்றும், இரைப்பை இயல்பு நிலையில் இருந்தது என்றும், அதன் வெட்டுத் தோற்றத்தில் 100 மில்லி அளவில் பழுப்பு நிற திரவம் இருந்தது என்றும், குறிப்பிடத்தக்க எந்த நெடியும் இல்லை என்றும், அதன் சிலேட்டும படலம் இயல்பு நிலையில் இருந்தது என்றும், சிறுநீர்ப்பை காலியாக இருந்தது என்றும், இடுப்பு எலும்பு இயல்பு நிலையில் இருந்தது என்றும், முதுகெலும்பின் நெடுவரிசை இயல்பு நிலையில் இருந்தது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

26) அ.சா.9 கனகஸ்ரீ மேலும் தனது சாட்சியத்தில், இறந்த நேரமானது மருத்துவமனை கோப்பில் 16.03.2020 இரவு 21.00 மணி என

குறிக்கப்பட்டிருந்தது என்றும், தனது பிரேத பரிசோதனை முடிவு அதனுடன் ஒத்திருந்தது என்றும், உடல் உள்ளுறுப்புகள் இரசாயண பகுப்பாய்விற்காக வட்டார தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றும், இரத்தம் தோய்ந்த காட்டன் துணி இறந்தவரின் இரத்த வகையை கண்டறிய வட்டார தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றும், இறுதி கருத்து இறந்து நபரானவர் அவருக்கு ஏற்பட்ட தலை காயத்தின் விளைவுகளால் இறந்திருக்கக்கூடும் என சான்று வழங்கினேன் என்றும், தனது பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ.8 என்றும், விசரா அறிக்கை அதசாஆ.9 என்றும், அதில் மேற்படி இறந்தவரின் உள்ளுறுப்புகளில் மதுவோ, விஷமோ கண்டுபிடிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தனது இறுதி கருத்துரை அதசாஆ.10 என்றும், அருவாள் போன்ற ஆயுதத்தால் மேற்படி நபரை ஒருவர் தாக்கும்போது அவருக்கு மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்டு அதனால் இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு என்றும், ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

27) அ.சா.10 ஆசியா தனது சாட்சியத்தில், தான் தற்சமயம் திருவெறும்பூர் மதுவிலக்கு பிரிவில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 17.10.2020 அன்று துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியிலிருந்தபோது துவரங்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.48/2020 இதச பிரிவு 307 @ 302 வழக்கில் இறந்துபோன பழனிச்சாமி

என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை அலுவலுக்கு நியமிக்கப்பட்டு காவல் ஆய்வாளர் பிரேத விசாரணைக்கு பின் பிரேத பரிசோதனை செய்ய கோரிய வேண்டுகோள் கடிதத்தைப் பெற்று திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவரிடம் ஒப்படைத்து பிரேதத்தை அடையாளம் காண்பித்து பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தேன் என்றும், பிரேத பரிசோதனையின்போது உடல் உள்ளுறுப்புகளை சேகரித்து தன்னிடம் கொடுத்ததை தான் திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

28) அ.சா.11 வினோதா தனது சாட்சியத்தில், தான் தற்சமயம் அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தான் இதற்கு முன்பு 16.03.2020 அன்று திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவராக பணியிலிருந்தபோது அன்று மாலை 07.45 மணியளவில் இந்த வழக்கில் காயம்பட்ட ஆண்டிசாமி மகன் பழனிசாமி என்பவரை அவரது தாயார் அழகம்மாள் சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்றும், காயம்பட்டவர் சுயநினைவின்றி இருந்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

29) அ.சா.11 வினோதா தனது சாட்சியத்தில், துவரங்குறிச்சி, அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தபோது அந்த விபத்து பதிவேட்டில்

உள்ள விபரங்களின்படி அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு மேல்சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றும், அவரை பரிசோதித்து பார்த்தபோது அவருக்கு இதய துடிப்பு, நாடித் துடிப்பு சற்று குறைவாகவே இருந்தது என்றும், பின்பக்க மண்டையில் 20x2x3 cm அளவில் வெட்டுக்காயம் இருந்தது என்றும், இடது கை முழங்கைக்கு கீழ் கிழிந்த காயம் இருந்தது என்றும், அவரை தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்நோயாளியாக அனுமதித்தேன் என்றும், பின்பு விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன் என்றும்,அந்த விபத்து பதிவேடு அதசாஆ.11 என்றும், இது தொடர்பாக துவரங்குறிச்சி வட்ட காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.த.சா.பொ.1 ஆயுதத்தால் அந்த நபரை மற்றொருவர் தாக்கும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றும் சாட்சியமளித்துள்ளார்.

30) அ.சா.12 ஆனந்தராஜ் தனது சாட்சியத்தில், தான் தற்சமயம் புதுக்கோட்டை மாவட்டம், நமனசமுத்திரம் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இதற்கு முன்பு திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்தேன் என்றும், அந்த காவல் நிலையத்தில் கணினி பதிவு செய்யும் பொறுப்பில் பணிபுரிந்தேன் என்றும், துவரங்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.48/2020 இதச பிரிவு 307 @ 302 வழக்கில் துவரங்குறிச்சி வட்ட ஆய்வாளருக்கு சாட்சிகள் விசாரணையின்போதும், எதிரி சொக்கலிங்கம் (எ)

ஜெயராமன் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியபோதும் உடனிருந்து அந்த வாக்குமூலங்களை ஆய்வாளர் சொல்ல சொல்ல மடிக்கணினியில் பதிவு செய்து சம்பவ இடத்திலேயே பதிவிறக்கம் செய்து ஆய்வாளரிடம் கொடுத்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

31) அ.சா.13 உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் தனது சாட்சியத்தில், தான் தற்சமயம் புதுக்கோட்டை மாவட்டம், ரெகுநாதபுரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 16.03.2020 அன்று துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது துவரங்குறிச்சி, அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி மேற்படி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையிலிருந்த ஆண்டிசாமி மகன் பழனிசாமி என்பவர் பேச முடியாத நிலையில் இருந்ததால் அவரது தந்தை சொன்ன புகார் வாக்குமூலத்தைப் பதிவு செய்து நிலையம் வந்து 19.00 மணியளவில் துவரங்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.48/2020 இதச பிரிவு 307 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், அசல் புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் துரித தபால் மூலம் மணப்பாறை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தேன் என்றும், முதல் தகவல் அறிக்கையின் நகல்களை உரிய உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், ஒரு நகலை புலன்விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன் என்றும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.12 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

32) அ.சா.14 ஜெயதேவி தனது சாட்சியத்தில், தான் தற்சமயம் திருப்பூர் மாவட்டம், பல்லடம் குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இதற்கு முன்பு திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, துவரங்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.48/2020 இதச பிரிவு 307 ன் கீழான முதல் தகவல் அறிக்கையை உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் பதிவு செய்து கொடுத்த முதல் தகவல் அறிக்கையின் நகலை புலன்விசாரணைக்காக பெற்றுக் கொண்டு 16.03.2020 அன்று இரவு சுமார் 20.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பழனிசாமி, பழனி ஆகியோர் முன்பாக சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தேன் என்றும், மாதிரி வரைபடம் வரைந்தேன் என்றும் பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த மாதிரி வரைபடம் அதசாஆ.13 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

33) அ.சா.14 ஜெயதேவி மேலும் தனது சாட்சியத்தில், பின்பு 22.00 மணியளவில் அதே சாட்சிகள் முன்பு சம்பவ இடத்திலிருந்து இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண், இரத்தம் படிந்த 36 என்று லேபிள் உள்ள வெள்ளை நிற அரைக்கை சட்டை ஒன்று, நண்டு பிராண்ட் லேபிள் உள்ள ஊதா, வெள்ளை கட்டம் போட்ட கைலி ஒன்று ஆகியவற்றை மகசரில் கைப்பற்றினேன் என்றும், இவ்வழக்கில் காயம்பட்டு சிகிச்சையில் திருச்சி, அரசு மருத்துவமனையிலிருந்த பழனிச்சாமி அன்றைய தினமே 21.00 மணிக்கு

இறந்துவிட்டதாக கிடைத்த தகவலைப் பெற்று அன்றையதினமே 23.40 மணியளவில் இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவு 307 லிலிருந்து இதச பிரிவு 302 ஆக சட்ட மாறுதல் செய்து சட்ட மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், அந்த சட்ட மாறுதல் அறிக்கை அதசாஆ.14 என்றும், அதைத் தொடர்ந்து 17.03.2020 அன்று காலை 07.00 மணி முதல் 10.00 மணி வரை திருச்சி, அரசு மருத்துவமனை சவக்கிடங்கிலிருந்த பழனிச்சாமியின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயாரித்தேன் என்றும், அந்த பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ.15 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

34) அ.சா.14 ஜெயதேவி மேலும் தனது சாட்சியத்தில், பெண் காவலர் ஆசியா என்பவர் மூலம் பிரேத பரிசோதனை செய்ய வேண்டி மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன் என்றும், சாட்சிகள் ஆண்டிச்சாமி, பாலமுருகன், அடைக்கம்மாள், பழமலை, பழனிச்சாமி, பிடாரன், பழனிச்சாமி, பழனி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 17.03.2020 அன்று மதியம் 12.30 மணியளவில் தான் நிலைய பொறுப்பிலிருந்தபோது இக்கரை கோசிக்குறிச்சி கிராம நிர்வாக அலுவலர் சிவராஜ் என்பவர் தன்னிடம் சரணடைந்ததாக சொக்கலிங்கம் என்கிற ஜெயராஜை கொண்டு வந்து ஒப்படைத்தார் என்றும், அந்த சொக்கலிங்கம் என்கிற ஜெயராஜை சாட்சிகள் சிவராஜ், இளங்கோவன் முன்னிலையில்

காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன் சம்பவத்தின்போது, அணிந்திருந்த இரத்தக்கறை படிந்த சட்டையையும், சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளையும், சம்பவ இடத்திற்கு எதிரி தான் ஓட்டிவந்த PY 01 BP 9270 என்ற பல்சர் பைக்கை ஆஜர் செய்வதாகவும், அருவாளையும், சட்டையையும் எடுத்து ஆஜர் செய்வதாகவும் சொன்னார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சாட்சிகளிடமும், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமனிடமும், கையொப்பம் பெற்றேன் என்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அதசாஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

35) அ.சா.14 ஜெயதேவி மேலும் தனது சாட்சியத்தில், அன்றையதினமே 14.30 மணியளவில் கம்பிளியம்பட்டி கிராமத்தில் உள்ள எதிரி சொக்கலிங்கம் என்கிற ஜெயராஜ் தோட்டத்திலிருந்து எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன் எடுத்து ஆஜர் செய்த PY 01 BP 9270 என்ற பல்சர் பைக், 50 செமீ அளவுள்ள அதில் 17 செமீ வளைந்த கைப்பிடியுள்ள 12 செமீ மரகைப்பிடியுடன் ஒரு பக்கம் கூர்மையுள்ள இரும்பு அருவாள் இரத்தக்கறையுடன் கூடியது ஒன்றையும் மற்றும் blendy orginal cos fashion 100 percent cotto shirts பச்சை வெள்ளை கட்டம் போட்ட முழுக்கை சட்டை இரத்தம்படிந்தது ஒன்று ஆகியற்றை அதே சாட்சிகள்

முன்பு மகசரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அதசாஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், சாட்சிகள் சிவராஜ், இளங்கோவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

36) அ.சா.14 ஜெயதேவி மேலும் தனது சாட்சியத்தில், எதிரி சொக்கலிங்கம் (எ) ஜெயராமன் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன் என்றும், கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்களை படிவம் 91 மூலம் மணப்பாறை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தேன் என்றும், அந்த இரண்டு படிவம் 91 அதசாஆ.16 வரிசை (2 எண்ணிக்கை) என்றும், பின்பு 17.03.2020 அன்று காயம்பட்ட பழனிசாமிக்கு சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைத்த துவரங்குறிச்சி அரசு மருத்துவர் பிரபாகரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் விபத்துப் பதிவேடு பெற்றேன் என்றும், வழக்கின் சாட்சியான ஆண்டிசாமி, பாலமுருகன், அடைக்கம்மாள் ஆகியோரை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், வழக்கின் சாட்சிகளான செல்வமணி, நாச்சியம்மாள், மாணிக்கம் ஆகியோர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இத்துடன் தான் பணி மாறுதலில் சென்றுவிட்டேன் என்றும், மேல்விசாரணையை தனக்கு பின் வந்த ஆய்வாளர் பாலாஜி என்பவர் மேற்கொண்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

37) அ.சா.15 பாலாஜி தனது சாட்சியத்தில், தான் தற்சமயம் அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 20.11.2020 அன்று துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியிலிருந்தபோது துவரங்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.48/2020 இதச பிரிவு 307 @ 302 வழக்கை தனக்கு முன்பிருந்த ஆய்வாளர் ஜெயதேவி என்பவர் முதல்விசாரணை செய்து, அவர் பணிமாறுதலில் சென்று விட்டதால் மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றும், அன்றைய தினமே சம்பவ இடமான பீரங்கிமேடு கிராமம் சென்று, சம்பவ இடத்தைப் பார்வையிட்டும், சாட்சிகள் ஆண்டிசாமி, பாலமுருகன், அடைக்கம்மாள் ஆகியோரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மேலும், முன்பிருந்த ஆய்வாளர் விசாரித்த மற்ற சாட்சிகளை தான் விசாரித்தபோது அவரிடம் கொடுத்த வாக்குமூலங்களையே தன்னிடம் கொடுத்ததால் தான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

38) அ.சா.15 பாலாஜி மேலும் தனது சாட்சியத்தில், 25.11.2020 ஆம் தேதி சாட்சிகள் செல்வமணி, நாச்சியம்மாள், மாணிக்கம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் 15.12.2020 அன்று திருச்சி அரசு மருத்துவக்கல்லூரிக்கு சென்று மருத்துவர் திருமதி கனகஸ்ரீ என்பவரை விசாரித்தும், இறந்த பழனிச்சாமியின் பிரேத பரிசோதனை அறிக்கைப் பெற்றேன்

என்றும், மேற்படி மருத்துவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன் என்றும், அன்றையதினமே திருச்சி தடய அறிவியல் ஆய்வகம் சென்று திருமதி சிவசங்கரி என்பவரை விசாரித்து ஆய்வறிக்கை பெற்றேன் என்றும், அன்றையதினமே முதல்நிலை பெண் காவலர் திருமதி ஆசியா மற்றும் உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 09.12.2020 பெறப்பட்ட வேதியியல் அறிக்கை அதசாஆ.17 என்றும்,. 26.08.2020 அன்று பெறப்பட்ட பயாலஜி அறிக்கை அதசாஆ.18 என்றும், 22.01.2021 அன்று பெறப்பட்ட செராலஜி அறிக்கை அதசாஆ.19 என்றும், பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து 23.01.2021 ஆம் தேதி எதிரி சொக்கலிங்கம் மீது இதச பிரிவு 302 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

39) **குற்ற விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (b) வின் கீழ் வினவுதல்:**

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிந்த பின்னர் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகளை விளக்கி கூறி, குற்ற விசாரணை முறைச் சட்டப்பிரிவு 313(1)(b) ன் கீழ் விசாரித்தபோது, மேற்படி எதிரியிடம் மேற்படி சாட்சிகள் கூறிய விவரங்கள் பொய் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். பின்னிட்டு, அவர் தரப்பில் பழனிவேல் என்பவர் எ.த.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

40) எ.சா.1 தனது சாட்சியத்தில் நான் திண்டுக்கல் மாவட்டம், கம்பிளியம்பட்டி கிராமத்தில் வசிக்கிறேன் என்றும், தனது அடையாள அட்டை எடுத்து வந்துள்ளேன் என்றும், எதிரி சொக்கலிங்கம் என்கிற ஜெயராஜை தெரியும் என்றும், எதிரியின் சொந்த ஊர் கம்பளியம்பட்டிதான் என்றும், எதிரி சிறு வயது முதல் கம்பிளியம்பட்டியில்தான் அவரது தாய் தந்தையருடன் குடியிருந்து வருகிறார் என்றும், எதிரி முதலில் விவசாய வேலை செய்தார் என்றும், தற்சமயம் எதிரி பாண்டிச்சேரியில் வசித்து இடியாப்பம் செய்து, விற்கும் தொழில் செய்கிறார் என்றும், எதிரிக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டது என்றும், எதிரிக்கு மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள் என்றும், அக்கரைப்பட்டி மற்றும் இக்கரைகோசிகுறிச்சி ஆகியவை திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுக்காவில் உள்ளன. இக்கரைகோசிகுறிச்சி கிராமத்தை சேர்ந்த அ.சா.1 ஆண்டிசாமி மற்றும் அவரது மகன் பழனிச்சாமி ஆகியோரை தெரியும். பழனிச்சாமிக்கு திருமணமாகவில்லை. பழனிச்சாமி டீசல் டேங்கர் லாரியை ஓட்டி வந்தார் என்றும், பழனிச்சாமி எப்படிப்பட்ட குணநலம் கொண்டவர் என்றால் அவர் சரியான நடத்தையில்லாதவர். பல்வேறு ஊர்களில் பெண்களிடம் வம்பிழுத்து சண்டை செய்யும் பழக்கம் கொண்டவர் என்றும், இந்த விபரம் எப்படி தெரியும் என்றால் எங்கள் ஊர் கம்பளிம்பட்டிக்கு அருகில் சிமெண்ட் கலம் என்ற ஊர் உள்ளது என்றும், அந்த இடத்தில் பழனிச்சாமி லாரியை நிறுத்திவிட்டு அவரது நண்பர்களுடன் சேர்ந்து குடித்து கும்மாளம் செய்து பல பெண்களுடன் வம்பிழுத்துக் கொண்டிருப்பார் என்றும், குறிப்பிட்டு ஏதேனும்

சம்பவம் சொல்லமுடியுமா என்றால் பழனிச்சாமியின் கொலை நடப்பதற்கு 6 மாதம் முன்பாகவே பழனிச்சாமி செந்தரை அருகே அடைக்கனூர் என்ற கிராமத்தில் திருவிழாவின்போது ஒரு பெண்ணை வம்பிழுத்து அந்த ஊர்க்காரர்கள் பழனிச்சாமியை கட்டிவைத்துவிட்டார்கள் என்றும், தானும் அங்கு போயிந்தேன் என்றும், அவர் தெரிந்தவர் என்பதால் தாங்கள் ஊர்க்காரர்களிடம் பேசி பழனிச்சாமியை விடுவித்தோம் என்றும், அதன்பிறகு கம்பிளிம்பட்டியிலிருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் உள்ள எர்ரம்பட்டி என்ற ஊரில் ஒரு பெண்ணை பழனிச்சாமி வம்பிழுத்தார் என்றும், அதனால் பிரச்சனை ஏற்பட்டு பழனிச்சாமியை அந்த ஊர்க்காரர்கள் அடித்துவிட்டார்கள் என்றும், தாங்கள் எல்லாம் சேர்ந்து பஞ்சாயத்து செய்து அங்கிருந்து பழனிச்சாமியை கூட்டிவந்தோம் என்றும், இந்த வழக்கில் பழனிச்சாமியை எதிரி சொக்கலிங்கம் கொலை செய்துவிட்டதாக சந்தேகப்பட்டு, அவரை பிடித்து சென்றார்கள் என்றும், அந்த சம்பவம் 2020 ல் நடந்தது என்றும், அந்த சம்பவம் எனக்கு எப்போது தெரியும் என்றால் பேப்பரில் பார்த்து இரண்டு நாட்கள் கழித்துதான் தெரியும் என்றும், பழனிச்சாமி கம்பளியம்பட்டியில் தங்குவாரா என்றால் இல்லை என்றும், சிமெண்ட் கலத்தில் லாரியை போட்டுவிட்டு கம்பிளியம்பட்டி சென்றுவிட்டு வருவார் என்றும், எதிரி சொக்கலிங்கம் எப்படிப்பட்டவர் என்றால் நல்ல பையன். பழனிச்சாமி தவறான பையன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

41) **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>**

இந்த வழக்கில் எதிரி மீது இதச சட்டப்பிரிவு 302-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

**<u>தீர்வு:-</u>**

42) அரசு தரப்பில் வாதிட்ட. கற்றறிந்த கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிக்க, அரசுத்தரப்பில், அ.சா.1 முதல் அ.சா.15 வரையிலான சாட்சிகளையும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.19 வரையிலான சான்றாவணங்களையும், அ.த.சா.பொ.1 முதல் அ.த.சா.பொ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்திலிருந்தும், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்களிலிருந்து, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு, அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே. எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார். இதே கருத்தை விரிவாக வலியுறுத்தி, அரசுத்தரப்பில் எழுத்துப்பூர்வ வாதுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

43) மாறாக, எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், சம்பவத்தை நேரில் கண்ணுற்றதாகக் கூறி அ.சா.1 அ.சா.2 மற்றும்

அ.சா.5 ஆகிய சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும், அ.சா.1 இறந்தவரின் தந்தை என்றும், அ.சா.2 இறந்தவரின் தாயார் என்றும், அ.சா.5 இறந்தவரின் மாமா மகன் என்றும், அவர்களின் சாட்சியத்தில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளதாகவும், அ.சா.1, அ.சா.2, அ.சா.5 சம்பவத்தை நேரில் கண்ணுற்றதாகக் கூறி விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் இறந்தவரின் பெற்றோர் மற்றும் உறவினர் என்றும், வேறு தனிநபர் சாட்சிகள் யாரையும் அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படவில்லையென்றும், அரசுத்தரப்பு தான் எதிரி மீதான வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க வேண்டும் என்றும், அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.5 வரையான சாட்சிகளின் சாட்சியத்தில், பல்வேறு முரண்பாடுகள் இருப்பதாகவும், எதிரி அ.சா.1ன் கொழுந்தியா மகன் தான் என்றும், விபத்துப் பதிவேட்டில் அடையாளம் தெரியாத நபர் தாக்கியதாகத்தான் கூறப்பட்டுள்ளது என்றும், அதேபோல் எதிரிக்கும், இறந்தவருக்கும் இருந்ததாகக் கூறப்படும் முன்விரோதம் தொடர்பாகவும் சந்தேகம் எழுவதாகவும், எதிரியை கைது செய்தது தொடர்பாகவும், ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பாகவும், தடயப்பொருட்கள் கைப்பற்றியது தொடர்பாகவும், பல்வேறு முரண்பாடுகள் உள்ளதாகவும், தடயம் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் பகுதி திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தது என்றும், அங்குள்ள கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஊர்மக்களை சாட்சியாக விசாரிக்கவில்லையென்றும், பழனிச்சாமி இறப்பிற்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றும், அரசுத்தரப்பு வழக்கின் மீது பல்வேறு சந்தேகங்கள் எழுவதாகவும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கி

அவரை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார். இதே கருத்தை விரிவாக வலியுறுத்தி, எதிரி தரப்பில் எழுத்துப்பூர்வ வாதுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

44) மேலும் எதிரி தரப்பில் பின்வரும் தீர்வு முடிவுகளும் முன்னிலைப்படுத்தப்பட்டன.

*1. Kansa Behera V. State of Orissa on 12 April,1987 reported in 1987 AIR 1507, 1987 SCR(2) 1096( Hon'ble Supreme Court of India)*

*2. Balamurugan Vs. State Represented by The Inspector of Police, Thirupachethi Police Station, Sivagangai District in Cr. No.62/2010 on 8 September, 2020 in Cri.A(MD) No.39 of 2015 ( Hon'ble Madurai Bench of Madras High Court).*

*3. Thulia Kali V. State of Tamil Nadu on 25 February,1972 reported in 1973 AIR 501, 1972 SCR (3) 622, 1972 SCC (3) 393 ( Hon'ble Supreme Court of India ).*

*4. Mohd. Muslim V. State of Uttar Pradesh Now Uttarakhand in Crl. Appeal No. 1089 of 2011, on 15.06.2023, reported in 2023 Live Law (SC) 489 (The Hon'ble Supreme Court of India).*

*5. Palaniappan vs. State rep.by the Inspector of Police. Kulithalai Police Station, Karur District in Cr.No.231/2014 reported in (2020) 3 MLJ (Crl) 372 (Hon'ble Madurai Bench of Madras High Court). .*

*6. Ramu Appa Mahapatar vs .The State of Maharashtra in Crl. Appeal No. 608 of 2013 , on 04.02.2025, reported in 2025 INSC 147 (Hon'ble Supreme Court of India)*

*7. Kansa Behera vs. State of Orissa on 12.04.1987 reported in 1987 AIR 1507 (Hon'ble Supreme Court of India) .*

*8. Apponianraj vs. The State Rep. By the Inspector of Police, K.10, Koyambedu Police Station, Koyambadu, Chennai-107, Cr.No.896 of 2017 on 27 June,2025 in Crl. Apl. No. 896 of 2017 i( Hon'ble High Court of Judicature at Madras).*

45) இருதரப்பு கருத்துக்களும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. எதிரி மீதான இதச சட்டப்பிரிவு 302–ன் கீழான குற்றச்சாட்டு, அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பது தொடர்பாக, பரிசீலிக்க வேண்டியுள்ளது.

46) எதிரி மீதான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பது பற்றி பரிசீலிக்கையில், புகார் தொடர்பாக பரிசீலனை செய்கையில், அ.சா.1 இறந்துபோனவரின் அப்பா ஆவார். அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், வழக்குச் சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றியும், புகார் வாக்குமூலம் கொடுத்தது தொடர்பாகவும், அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பத்திகள் 7 முதல் 9 ல் விவரித்தவாறு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், குறிப்பாக கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

*" ஆஜர் எதிரியை தெரியும். எனது மகன் பெயர் பழனிசாமி. இந்த வழக்கில் இறந்துபோனது எனது மகன் பழனிசாமிதான். அவர் டேங்கர் லாரியில் ஓட்டுனர் வேலை செய்து வந்தார். எனது மனைவியின் பெயர் அடைக்கம்மாள். என் மனைவியின் அக்கா பெயர் நாச்சம்மாள். நாச்சம்மாளின் வீடு அம்புலிபட்டியில் உள்ளது. என் மகன் லாரியில் ஓடிவிட்டு எனது வீட்டிற்கு எப்போதாவது வருவார். அடிக்கடி நாச்சம்மாள் வீடு உள்ள ஊருக்கும் போவார். என் மகனும், எதிரியும் முன்பு ஒன்றாக சேர்ந்து சுற்றினார்கள். அவர்களுக்கு ஏதோ பிரச்சனை என்று தெரிந்தது. எதிரியின் குடும்பத்தில் ஏதும் பிரச்சனை இருந்ததா என்று எனக்கு தெரியாது. கடந்த 16.03.2020 அன்று மாலை 05.00 மணியளவில் வேலை முடிந்து நானும், எனது மனைவியும் வந்தோம். பீரங்கி மேட்டில் எங்கள் பழைய வீட்டருகே எதிரி ஜெயராஜும், என் மகன் பழனிசாமியும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தனர். பாலமுருகனும் அவர்களுடன் உடனிருந்தார். எதிரி அப்போது கருப்புநிற பைக்கில் வந்திருந்தார். எதிரியும் என் மகனும் சண்டை போட்டதால் நான் ஏதோ சும்மா சண்டைபோடுகிறார்கள் என நினைத்துக் கொண்டிருந்தோம். அப்போது எதிரி அவரது பைக்கில் ஒரு அருவாளை வைத்துள்ளார், அதை எடுத்து வந்து என் மகனை தலையின் பின்புறம் வெட்டிவிட்டார். என் மகனை மீண்டும் வெட்ட வந்தபோது கையை நீட்டினார்., அதில் இடது கையில் வெட்டுப்பட்டு வாட்ச்சுடன் அந்த வெட்டு சரித்துக் கொண்டு போனது. எதிரி பையை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார். நாங்கள் போய் என் மகனைதான் பார்த்தோம். என் மகனை சிகிச்சைக்காக துவரங்குறிச்சி*

*அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்துமேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு இரவு 09.00 மணியளவில் என் மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். திருச்சி அரசு மருத்துமனையிலிருந்தபோது துவரங்குறிச்சி போலிசார் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் அதுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அதசாஆ.1 ஆகும். அந்த அருவாளை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும் அருவாள்தான் அன்று எதிரி என் மகனை தாக்கியதாகும். அந்த அருவாள் அதசாபொ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள். "*

47) மேலும், அ.சா.1 தன் குறுக்கு விசாரணையில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

*" சம்பவத்தன்று எதிரியும், என் மகனும் என்ன பேசி சண்டைபோட்டார்கள் என்றால் ஏதேச்சையாக போட்ட சண்டைதான். அது என்ன சண்டை என்றால் எதிரி மனைவி சண்டை போட்டுக்கொண்டு போய்விட்டார். அவரை திரும்ப கூப்பிட எதிரி என் மகனை கூப்பிட்டார். எங்கே போனாலும் அவர்கள் இருவரும் சேர்ந்து போவதால் எதிரி என் மகனை கூட வா என்று கூப்பிட்டார். என் மகன் எதிரியுடன் போக மறுத்துவிட்டார். எதிரிக்கும் அவர் மனைவிக்கும் என்ன பிரச்சனை ஏற்பட்டு எதிரியின் மனைவி கோபித்துக்கொண்டு போனார் என்று எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் நானும், எனது மனைவியும் இருந்தோம்.*

*எதிரியும், என் மகனும் இருந்தார்கள். அவர்களுடன் பாலமுருகனும் இருந்தார். அந்த புளியமரம் மற்றும் வீட்டிற்கு அருகே குடித்துவிட்டு போட்ட பாட்டில்கள் இருந்ததா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. எதிரியும், என் மகனும் சுமார் 15 அடி தூரத்தில் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். நானும், என் மனைவியும் சென்று சண்டையை விலக்கிவிட்டோம். மகனை திரும்ப கூட்டிவந்தோமா என்றால் இல்லை. அங்கேயேதான் மூன்று பேரும் இருந்தார்கள். எதிரி பைக்கிலிருந்து திடீரென அருவாளை எடுத்து வந்து என் மகனை வெட்டிவிட்டார். அந்த பைக்கின் பதிவு எண் தெரியாது. "*

*" மாலை 05.30 மணியளவில் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு போனோம். அப்போது அங்கு மருத்துவர் பணியிலிருந்தார். மருத்துவர் என் மகனுக்கு எப்படி, எங்கே, யாரால் காயம் ஏற்பட்டது என்று கேட்டார். நான் மருத்துவரிடம் எதிரி சொக்கலிங்கத்தால்தான் இந்த காயம் ஏற்பட்டது என்று சொன்னேன். "*

48) அ.சா.2 அடைக்கலம்மாள் இறந்துபோனவரின் தாயார் ஆவார். தனது முதல் விசாரணை சாட்சியத்தில், இவர் நடந்த சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றியும், பிரேத விசாரணையின்போது உடனிருந்தது பற்றியும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பத்திகள் 10 மற்றும் 11–ல் விவரித்தவாறு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

*"எதிரியை தெரியும். எதிரி எனது அக்கா மகன். இந்த வழக்கில் இறந்துபோனது எனது மகன் பழனிசாமி. என் மகன் லாரி டிரைவராக வேலை செய்தார். என் அக்கா பெயர் நாச்சம்மாள். அவர் கம்பளியாம்பட்டியில் வசிக்கிறார். டிரைவர் வேலைக்கு செல்லாமல் என் மகனை எனது அக்கா அவர் வீட்டில் வேலைக்கு வைத்திருந்தார். எதிரிக்கும், என் மகனுக்கும் என்ன பிரச்சனை என்றால் எதிரி என் மகனை அவரது மனைவியுடன் இணைத்து சந்தேகப்பட்டார். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மாலை 05.00 மணியளவில் எதிரி அருவாளால் என் மகனை தலையில் பின்புறம் வெட்டிவிட்டார். இடது கையில் வெட்டிவிட்டார். எதிரி மூன்று வெட்டு வெட்டினார். அந்த சமயத்தில் நான், என் கணவர், என் அண்ணன் மகன் பாலமுருகன் ஆகியோர் அந்த இடத்தில் இருந்தோம். அந்த பீரங்கிமேட்டில் எங்கள் வீட்டு அருகே உள்ளது. அந்த அருவாளை பார்த்தால் தெரியும். என்னிடம் காட்டப்படும் அதசாபொ.1 அருவாள்தான் அதுவாகும். அதன்பிறகு என் மகனை துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்து சென்றோம். அங்கு பார்க்கமுடியாது என்று சொல்லி திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அங்கு இரவு 09.00 மணிக்கு என் மகன் இறந்துவிட்டார். "*

49) மேலும், அ.சா.2 தன் குறுக்கு விசாரணையில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

*" நான் பாலாறுபட்டியில் வேலை முடித்துவிட்டு நான் குடியிருக்கும் வீட்டிற்கு வந்தபோது என் மகன் வெட்டுப்பட்டுகிடப்பதாக சொன்னதன்பேரில் அங்கு போனேன் என்றால் சரிதான். என் மகனை நான்தான் தூக்கி ஆம்புலன்சில் வைத்தேன். அப்போது என் புடவையில் இரத்தமானது. "*

50) அ.சா.3 பாலமலை மற்றும் அ.சா.4 பழனிச்சாமி சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியாவார். இவர் சம்பவம் பற்றி கேள்விப்பட்டு மருத்துவமனை சென்று பார்த்ததாகவும் போலீசார் பிரேதத்தைப் பார்த்து எழுதியதாகவும் தாங்கள் கையெழுத்து செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளனர்.

51) அ.சா.5 சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறி விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.5 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

*" அசா.1 ஆண்டிசாமி எனக்கு அத்தை கணவர். அசா.2 அடைக்கம்மாள் எனது அத்தை ஆவார். வழக்கில் இறந்துபோன பழனிசாமியை தெரியும். இறந்துபோன பழனிசாமி எனக்கு அத்தை மகன். அவர் அசா,1, 2 ன் மகன் ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும். அவரும் எனக்கு அத்தைமகன்தான். 16.03.2020 அன்று மாலை 05.00 மணியளவில் எதிரி சொக்கலிங்கம் என்னை அழைத்து அவரது பல்சர் வண்டிக்கு பெட்ரோல் போட்டு வர சொன்னார். நான் பெட்ரோல் போட்டுவிட்டு வந்தபோது பீரங்கிமேடு அருகே எனது ஆண்டிசாமி மாமா வீடு அருகே ஆஜர் எதிரியும், பழனிசாமியும் சண்டை போட்டுக்*

*கொண்டிருந்தார்கள். சண்டை நடந்து கொண்டிருந்தபோதே எதிரி சொக்கன் என்கிற சொக்கலிங்கம் அருவாளை எடுத்து பழனிசாமியின் தலையின் பின்புறம் வெட்டிவிட்டார். பக்கத்திலிருந்த ஆட்கள் வந்தார்கள். சொந்தக்காரர்கள் வரவில்லை. எதிரி வெட்டியதால் பழனிசாமிக்கு பின்தலையில் காயம் இருந்தது. அவரை ஆம்புலன்ஸ் மூலம் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து போனோம். அங்கிருந்து திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு பழனிசாமி இறந்துவிட்டார். ஆயுதத்தைப் பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். என்னிடம் காட்டப்படும் அதசாபொ.1 அருவாளால்தான் எதிரி, பழனிசாமியை வெட்டினார். போலிசார் என்னை விசாரித்தார்கள். "*

52) மேலும் அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

*"அசா.1, அசா.2 ஆகியோர் வேறு நபர்களின் தோட்ட வேலைக்கு போகமாட்டார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று எத்தனை மணிக்கு எதிரி சொல்லி பெட்ரோல் போட போனேன் என்றால் சுமார் 05.00 மணி இருக்கலாம், துவரங்குறிச்சிக்கு போனேன். பிரங்கிமேட்டிலிருந்து துவரங்குறிச்சி போக 30 நிமிடம் ஆகலாம் என்றால் சரிதான். நான் திரும்பி வரும்போது சுமார் 06.00 அல்லது 06.30 மணியானது என்றால் சரிதான். இறந்துபோன பழனிசாமி திருமணமாகாத நபர் என்றால் சரிதான். பழனிசாமி டேங்கர் லாரி ஓட்டப்போவதால் பல ஊர்களுக்கு சென்று தங்குவார் என்றால் சரிதான்.*

*அவ்வாறு செல்லும்போது அவர் பெண்களிடம் அடிதடி சண்டை செய்வார். பழனிசாமி பெண்களிடம் தவறாக நடப்பதால் ஊர்காரர்கள் அடிதடிக்கு வருவார்கள் என்றால் சரிதான். அக்கம்பக்கம் ஊர்காரர்கள் பழனிசாமி மீது விரோதமாக இருந்தார்கள் என்றால் சரிதான். அன்று மாலை 06.00 மணிக்கு திரும்பி வரும்போது நான் மது அருந்திவிட்டு வந்து அந்த வீட்டருகே படுத்துவிட்டேன் என்றால் சரிதான். சொக்கலிங்கம், பழனிசாமியும் சண்டைப் போட்டது எனக்கு நேரடியாக தெரியாது. பீரங்கிமேட்டிற்கு மேற்புறம் உள்ள வீடு பாழடைந்த வீடு என்றாலும், அதில் யாரும் குடியிருக்க முடியாது என்றாலும் சரிதான். என்னை சம்பவத்திற்கு பிறகு துவரங்குறிச்சி போலிசார் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று இரவு முழுவதும் அங்கு வைத்தார்கள் என்றால் சரிதான். எதிரி சொக்கலிங்கத்தையும் அன்று இரவு அவரது வீட்டிலிருந்து கூட்டிவந்து என்னுடன் காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான்."*

53) அ.சா.6 பழனி பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியாவார். இவர் போலீசார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரிலும் தடயப்பொருட்கள் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகசரிலும் சாட்சிக் கையொப்பமிட்டதாக சாட்சியமளித்துள்ளார்.

54) அ.சா.7 பழனிச்சாமிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஆவார். அவர் பழனிச்சாமியை பரிசோதித்து பார்த்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

*" 1) தலையின் பின்புறத்தில் 20x2x3 cm அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த காயம் தலையின் பின்புறம் கபாலம் வரை வெட்டுக்காயம் இருந்தது. தலைப்பகுதியில் உள்ள ஆக்சிபிட்டல் பகுதியில் உள்ள எலும்பு முறிந்திருந்தது.*

*2) இடது முன்கையில் 5x1x1 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.*

அவரை மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும், தான் வழங்கிய விபத்து பதிவேடு அதசாஆ.4 என்றும், அருவாள் போன்ற ஆயுதத்தால் ஒரு நபர் அவரைத் தாக்கும்போது அவருக்கு மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றும், மேற்படி காயத்தால் அந்த நபருக்கு இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு என்று இறுதி கருத்துரை வழங்கியுள்ளார்.

55) மேலும் அ.சா.7 தனது குறுக்கு விசாரணையில் கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

*"நோயாளி மருத்துவமனைக்கு வரும்போதே போலிசாரும் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். போலிசார் அங்கு என்ன செய்தார்கள் என்று நான் கவனிக்கவில்லை."*

56) அ.சா.8 சிவராஜ் சம்பவ சமயத்தில் இக்கரைகோசிகுறிச்சி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தவர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

*" மருங்காபுரி வட்டம், இக்கரைகோசிகுறிச்சி கிராம நிர்வாக அலுவலராக 17.03.2020 அன்று பணியிலிருந்தபோது எனது உதவியாளராக இளங்கோவன் என்பவர் இருந்தார். அன்று அலுவலகத்தில் இருந்தபோது மதியம் 12.15 மணிக்கு ஒருவர் எங்களிடம் வந்தார். அவரை விசாரித்தபோது சொக்கலிங்கம் (எ) ஜெயராஜ் என்று சொன்னார். அவர் ஆஜர் எதிரிதான். அவர் எங்களிடம் பீரங்கிமேடு ஆண்டிசாமி வீட்டிற்கு முன்பாக பழனிச்சாமி என்பவரை அருவாளால் 16.03.2020 அன்று மாலை 05.00 மணியளவில் வெட்டிவிட்டதாகவும், அந்த காயத்தின் காரணமாக அந்த நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அவர் இறந்துவிட்டதாகவும், தான் காவல்துறைக்கு போனால் அடித்துவிடுவார்கள் என்று பயந்துகொண்டு என் முன்பாக ஆஜராவதாக சொன்னார். அவரை நானும், எனது உதவியாளரும் அழைத்து சென்று துவரங்குறிச்சி காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு ஆய்வாளர் முன்பாக அவரை ஆஜர்படுத்தினோம். ஆய்வாளர் ஆஜர் எதிரியை கைது செய்து எங்கள் முன்பு விசாரித்தார். அப்போது எதிரி தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், எதிரி நடந்த சம்பவத்தைப் பற்றி அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறினார். மேலும் தன்னை அழைத்து போனால் கம்பிளியம்பட்டியில் உள்ள தனது தோட்டத்தில் உள்ள மாட்டு கொட்டகையில் மறைத்து வைத்திருந்த அருவாளையும், ஒரு கருப்பு கலர் பல்சர் வண்டியையும், இரத்தக்கறை படிந்த சட்டையையும் எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார், அதில் எதிரி கையொப்பம்*

*செய்தார். நானும், எனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.5 ஆகும். (சிவப்பு மையினால் அடிகோடிட்ட பகுதி மட்டும், அடைப்புகுறிக்குள் உள்ள பகுதி நீங்கலாக). பின்பு எதிரி மற்றும் போலிசார், உதவியாளருடன் கம்பிளியாம்பட்டிக்கு சென்றோம். அப்போது மதியம் 02.30 மணி இருக்கும். எதிரி அவரது மாட்டுக் கொட்டகையில் சொருகியிருந்த அருவாளை எடுத்துஆஜர் செய்தார். மேலும் அவர் ஒரு கருப்பு கலர் பல்சரையும், இரத்தக்கறை படிந்த வெள்ளைகலர் சட்டையையும் ஆஜர் செய்தார். அவற்றை ஆய்வாளர் எங்கள் முன்பாக ஒரு மகசரில் கைப்பற்றினார், அந்த அருவாள் என்னிடம் காட்டப்படும் அதசபொ.1 தான். எதிரி ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த வெள்ளைக்கலர் சட்டை என்னிடம் காட்டப்படுவதுதான். அது அதசாபொ.6 ஆகும். அந்த கருப்பு பல்சர் பைக்கின் பதிவு எண்.PY 01 BP 9270 ஆகும். ஆய்வாளர் கைப்பற்றிய மகசர் என்னிடம் காட்டப்படுவதுதான். அதில் நானும், எனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ.6 ஆகும்.எதிரியை காவல்நிலையத்தில் ஆஜர் செய்யும்போது நான் ஒரு அறிக்கை தயாரித்து ஆய்வாளரிடம் கொடுத்தேன். அந்த அறிக்கை அதசாஆ.7 ஆகும்."*

57) மேலும் அ.சா.8 தனது குறுக்கு விசாரணையில் கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

*" கம்பிளியாம்பட்டி கிராமம் திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். கோசிகுறிச்சிக்கு தனி கிராம நிர்வாக அலுவலர் உள்ளார் என்றால் சரிதான். அவர் பெயர் தெரியாது. அவர் வேறு மாவட்டத்தை சேர்ந்தவர் என்றால் எனக்கு தெரியாது. கோசிகுறிச்சி கிராம நிர்வாக அலுவலகம் எங்குள்ளது என்று தெரியாது. கோசிகுறிச்சியிலிருந்து கம்பிளியாம்பட்டி 3 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். எதிரி சரனடைந்ததாக சொல்லும் தேதிக்கு முன்பாக அவரையோ, அவரது குடும்பத்தையோ எனக்கு தெரியாது. எதிரி என் முன்பாக நான் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில் சரணடையவில்லை என்றும், போலிசார் என்னை பின்னிட்டு காவல்நிலையத்திற்கு அழைத்து தேவைப்பட்ட தாள்களில் என்னிடமும், உதவியாளரிடமும் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல."*

58) அ.சா.9 டாக்டர் கனகஸ்ரீ இறந்தவரின் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ஆவார். இவர் தனது முதல் விசாரணை முதல் விசாரணை சாட்சியத்தில், அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பத்திகள் 23 முதல் 26-ல் உள்ளவாறு குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். அவர் தனது இறுதி கருத்துரையாக, இறந்த நபரானவர் அவருக்கு ஏற்பட்ட தலை காயத்தின் விளைவுகளால் இறந்திருக்கக்கூடும் என சான்று வழங்கினேன் என்றும், எனது பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ.8 என்றும், விசரா அறிக்கை அதசாஆ.9 என்றும், அதில் மேற்படி இறந்தவரின் உள்ளுறுப்புகளில் மதுவோ,

விஷமோ கண்டுபிடிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தனது இறுதி கருத்துரை அதசாஆ.10 என்றும், அருவாள் போன்ற ஆயுதத்தால் மேற்படி நபரை ஒருவர் தாக்கும்போது அவருக்கு மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்டு அதனால் இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு என்று சாட்சியமளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியத்திலிருந்து பழனிச்சாமி இறப்பு ஒரு கொலை தான் என்பது தெளிவாகிறது. ஆனால், அதில் எதிரி தான் ஈடுபட்டார் என்பதை மற்ற சாட்சிகள் அடிப்படையில் அரசுத்தரப்பே நிரூபிக்க வேண்டும்.

59) அ.சா.10 இறந்துபோன பழனிச்சாமி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை அலுவலுக்கு சென்ற, முதல்நிலைக்காவர் ஆசியா தனது முதல் விசாரணை சாட்சியத்தில், இறந்துபோன பழனிச்சாமி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யக் கோரிய வேண்டுகோள் கடிதத்தை பெற்று மருத்துவரிடம் ஒப்படைத்து பிரேதத்தை அடையாளம் காண்பித்து, பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை உளவினரிடம் ஒப்படைத்தது பற்றியும், உள்ளுறுப்புகளை சேகரித்து வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தது குறித்து சாட்சியமளித்துள்ளார்.

60) அ.சா.11 மருத்துவர் வினோதா காயம்பட்ட பழனிச்சாமிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஆவார். இவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் பத்திகள் 28 மற்றும் 29-ல் உள்ளவாறு கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

*"காயம்பட்டவர் சுயநினைவின்றி இருந்தார். துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தபோது அந்த விபத்து பதிவேட்டில் உள்ள விபரங்களின்படி அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு மேல்சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன்.அவரை பரிசோதித்து பார்த்தபோது அவருக்கு இதய துடிப்பு, நாடித் துடிப்பு சற்று குறைவாகவே இருந்தது. பின்பக்க மண்டையில் 20x2x3 cm அளவில் வெட்டுக்காயம் இருந்தது. இடது கை முழங்கைக்கு கீழ் கிழிந்த காயம் இருந்தது. அவரை தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்நோயாளியாக அனுமதித்தேன். பின்பு விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு அதசாஆ.11 ஆகும். இது தொடர்பாக துவரங்குறிச்சி வட்ட காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அதசாபொ1 ஆயுதத்தால் அந்த நபரை மற்றொருவர் தாக்கும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு."*

61) அ.சா.12 இரண்டாம் நிலை காவலர் ஆனந்தராஜ் மேற்படி வழக்கில் சாட்சிகள் விசாரணையின்போதும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியபோதும் உடனிருந்து அந்த வாக்குமூலங்களை ஆய்வாளர் சொல்ல சொல்ல மடிக்கணினியில் பதிவு செய்து சம்பவ இடத்திலேயே பதிவிறக்கம் செய்து ஆய்வாளரிடம் கொடுத்தது பற்றி சாட்சியமளித்துள்ளார்.

62) அ.சா.13 உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் துவரங்குறிச்சி, அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி மருத்துவமனை

சென்று அங்கு சிகிச்சையிலிருந்த பழனிச்சாமி என்பவரின் தந்தையிடம் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரை துரித தபால் மூலம் மணப்பாறை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்து பற்றியும், முதல் தகவல் அறிக்கையின் நகல்களை உரிய உயர் அதிகாரிகளுக்கு ஒப்படைத்தது பற்றியும் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்.

63) அ.சா.14 ஆய்வாளர் ஜெயதேவி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், தடயப்பொருட்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியது பற்றியும், பின்பு சட்டப்பிரிவை மாற்றம் செய்து சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது பற்றியும், பின்பு பழனிச்சாமி பிரேதத்தின் மீது, சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தது குறித்தும், சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும், எதிரியை கைது செய்து, எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தது குறித்தும், பின்னர் தடயப்பொருட்களை மகசரில் கைப்பற்றியது பற்றியும், பின்பு எதிரி மற்றும் தடயப் பொருட்களுடன் நிலையம் வந்து, எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தது குறித்தும், தடயப்பொருட்களை படிவம் 91 மூலம் நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தது

குறித்தும் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பத்திகள் 32 முதல் 36 வரையில் உள்ளவாறு சாட்சியமளித்துள்ளார்.

64) அ.சா.15 ஆய்வாளர் பாலாஜி வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, சாட்சிகளை விசாரணை செய்தது பற்றியும், மருத்துவரை விசாரணை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றது குறித்தும், வேதியியல் அறிக்கை, பயாலஜி அறிக்கை, செராலஜி அறிக்கை பெற்றது குறித்தும், பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார்.

65) இந்த வழக்கில் மேலே விவரித்த சாட்சிகளின் சாட்சியங்களின் அடிப்படையில், எதிரி மீதான இதச பிரிவு 302ன் கீழ் அரசுத்தரப்பு சந்திகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பது தொடர்பாக பரிசீலிக்கையில். சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான இறந்தவரின் தந்தையான அ.சா.1 தனது சாட்சியத்தில், 16.03.2020 மாலை 5.00 மணியளவில் பீரங்கிமேட்டில் தங்களது பழைய வீட்டருகே எதிரியும், தன் மகன் பழனிச்சாமியும் சத்தம் போட்டுக்கொண்டிருந்தததாகவும், அ.சா.5 பாலமுருகன் உடனிருந்தததாகவும், திடீரென்று எதிரி அவரது பைக்கிலிருந்த ஒரு

அருவாளை எடுத்து வந்து, தன் மகனை தலையின் பின்புறம் வெட்டியதாகவும், தன் மகனை மீண்டும் வெட்ட வந்தபோது, கையை நீட்டினார் என்றும். அதில் இடது கையில் வெட்டுப்பட்டு வாட்ச்சுடன் அந்த வெட்டு சரித்துக்கொண்டு போனது என்றும், தன் மகனை சிகிச்சைக்காக துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கிருந்து சிகிச்சைக்காக திருச்சி. அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், அங்கு இரவு 9.00 மணியளவில் தன் மகன் இறந்து விட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், திருச்சி மருத்துவமனையிலிருந்தபோது. துவரங்குறிச்சி போலீசார் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும்,ள அந்த புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.த.சா.பொ.1 அருவாள் தான் எதிரி தன் மகனை தாக்கப் பயன்படுத்தியது என்றும், அ.சா.1 உறுதி செய்துள்ளார். புகார்தாரரான அ.சா,.1 ன் சாட்சியத்தின் அடிப்படையில், அ.சா.ஆ.1 புகார் அரசுத்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

66) எதிரிக்கும், இறந்தவருக்கும் இருந்ததாகக் கூறப்படும், முன் விரோதம் தொடர்பாக, அ.சா.1 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லையென்றும், இது சந்தேகத்தை எழுப்புவதாகவும், எதிரி தரப்பில் வாதிடப்பட்டது. எதிரி தரப்பில் என்ன காரணத்திற்காக இருவருக்கும் சண்டை ஏற்பட்டது என்று அ.சா.1 இடம் குறுக்கு விசாரணையில் எழுப்பிய கேள்விக்கு, அவர், எதிரி, தன் மனைவியைக்

கூப்பிட்டு வரத்தான் தன் மகனை கூப்பிட்டார் என்றும், அதற்கு தன் மகன் போக மறுத்ததால் சண்டை நடந்ததாகவும் கூறியுள்ளார். அது எதேச்சையாக நடந்த சண்டைதான் என்று கூறியுள்ளார். ஒரு வாதத்துக்காக, அ.சா.1, அ.சா.2 ஆகியோர் எதிரிக்கும், இறந்தவருக்கும் இருந்ததாகக் கூறப்படும், முன் விரோதம் தொடர்பாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை என்று கருதினாலும், இந்த வழக்கு சந்தர்ப்ப சூழ்நிலையின் அடிப்படையில் அமைந்த வழக்கல்ல. இந்த வழக்கு, சம்பவத்தை நேரில் கண்ணுற்றதாக கூறப்படும் சாட்சிகளின், சாட்சியத்தின் அடிப்படையில் அமைந்த வழக்காகும். எனவே, இறந்தவருக்கும், எதிரிக்கும் உள்ள முன் விரோதம் குறித்து, அ..சா.1,2 குறிப்பிட்டு சாட்சியமளிக்காததாலேயே, அவர்களது சாட்சியத்தை முழுவதும் நிராகரிக்க முடியாது.

67) மேலும், சம்பவத்தைக் கண்ணுற்றதாகக் கூறப்படும் அ.சா.1, அ.சா.2, அ.சா.5 ஆகியோர் இறந்தவரின் உறவினர்கள் என்றும், அவர்களைத் தவிர வேறு தனி நபர்கள் யாரும் விசாரிக்கப்படவில்லையென்றும், அருகிலுள்ள நிலத்தைச் சேர்ந்தவர்கள் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும், இது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக எதிரி தரப்பில் ஒரு வாதம் செய்யப்பட்டது. மேற்படி அ.சா.1, அ.சா.2, அ.சா.5 இறந்தவருக்கு மட்டும் உறவினர் அல்ல. எதிரி, அ.சா.1ன் கொழுந்தியா மகன் என்பதை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி சாட்சிகளுக்கும், எதிரிக்கும் வேறு தனிப்பட்ட விரோதம் இருப்பதாக கூறப்படாத நிலையில், அவர்களைத் தவிர சம்பவத்தை நேரில் பார்த்த வேறு, தனி நபர்

சாட்சியகள் சாட்சியமளிக்கவில்லை. எனவே, எதிரி தரப்பில் எழுப்பப்பட்ட, மேற்படி கூற்றும் ஏற்புடையதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

68) இறந்தவரின் தாயாரான அ.சா.2 அடைக்கலம்மாள் தனது முதல் விசாரணையில், எதிரி தன் மகனை அருவாளால் வெட்டியதை, தான் பார்த்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால், அவரது குறுக்கு விசாரணையில், நான் பாலாறுபட்டியில் வேலை முடித்துவிட்டு, நான் குடியிருக்கும் வீட்டிற்கு வந்தபோது, தன் மகன் வெட்டுப்பட்டு கிடப்பதாக சொன்னதன்பேரில், அங்கு சென்றதாக சாட்சியமளித்துள்ளார். எனவே, சம்பவம்தொடர்பாக, அ.சா.2 ன் சாட்சியம் முழுமையாக ஏற்கும் வகையில் இல்லை.

69) மற்றொரு கண்ணுற்ற சாட்சியாகக் கூறப்பட்ட, அ.சா.5 பாலமுருகன் தனது முதல் விசாரணையில், 16.03.2020 அன்று பீரங்கிமேடு அருகே தனது ஆண்டிச்சாமி மாமா வீடு அருகே எதிரியும், இறந்துபோன நபரும் சண்டை போட்டுக்கொண்டிருந்தபோது, எதிரி அருவாளை எடுத்து பழனிச்சாமியின் தலையின் பின்புறம் வெட்டிவிட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் அ.த.சா.பொ.1 அருவாள் தான் எதிரி, பழனிச்சாமியை வெட்ட பயன்படுத்தியது என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில், என்ன காரணத்தாலோ?, தான் பெட்ரோல் போட துவரங்குறிச்சிக்கு 5.00 மணிக்கு போய்விட்டு 6.00, 6.30 மணிக்கு திரும்ப வந்ததாகவும், திரும்பி வரும்போது மது

அருந்திவிட்டு வீட்டருகே படுத்து விட்டதாகவும், சொக்கலிங்கமும், பழனிச்சாமியும் சண்டை போட்டது தனக்கு நேரடியாகத் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். எனவே, அ.சா.5 ன் சாட்சியமும் சம்பவம் தொடர்பாக முழுவதும் ஏற்கும் வகையில் இல்லையென்றாலும், சம்பவ சமயத்தில், எதிரியும், இறந்தவரும், இந்த வழக்கு சம்பவ இடத்தில் ஒன்றாக இருந்துள்ளனர் என்பதைப் பொறுத்து, அவரது சாட்சியம் ஏற்கும் வகையில் உள்ளது.

70. இதுபோன்ற சூழ்நிலையில், பின்வரும் தீர்வு முடிவுகளில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கீழ்கண்டவாறு தீர்மானித்துள்ளது.

1. **Vahula Bhushan Alias Vahuna Krishnan V. State of Tamil Nadu reported in** AIR 1989 SC 236 *wherein it was held as follows:*

*" The testimony of a single witness if it is straightforward, cogent and if believed is sufficient to prove the prosecution case, the conviction can be made on the testimony of such a single witness."*

*2.* In **Birbal Nath V. State of Rajasthan and others** reported in **2024(1) MWN(Cr.) 266 (SC) Page 266,** wherein it was held as follows:

*"Some discrepancies invariably occur in such cases when we take into account the fact that this Witness is a woman, who resides in a village and is the wife of a Farmer, who*

*tills his land and raises crops by his own hands. In otherwords, they are not big farmers. The rural setting, the degree of articulation of such a Witness in a Court of Law are relevant considerations while evaluating the credibility of such a Witness. Moreover, the lengthy cross-examination of a Witness may invariably result in contradictions. But these contradictions are not always sufficient to discredit a Witness. In* ***Rammi V. State of M.P.,*** *1999(8) SCC 649, this Court had held as under:*

*24. When an Eyewitness is examined at length it is quite possible for him to make some discrepancies. No true Witness can possibly escape from making some discrepant details."*

3. In Prabhu Dayal vs The State Of Rajasthan on 4 July, 2018 reported in AIR 2018 SUPREME COURT 3199 the Hon'ble Apex Court has held as follows:-

It is a common phenomenon that the witnesses are rustic and can develop a tendency to exaggerate. This, however, does not mean that the entire testimony of such witnesses is falsehood. Minor contradictions in the testimony of the witnesses are not fatal to the case of the prosecution. This Court, in State of U.P. v. M.K. Anthony, (1985) 1 SCC 505, held that inconsistencies and discrepancies alone do not merit the rejection of the evidence as a whole. It stated as follows:

10. While appreciating the evidence of a witness, the approach must be whether the evidence of the witness read as a whole appears to have a ring of truth. Once that impression is formed, it is undoubtedly necessary for the court to scrutinise the evidence more particularly keeping in view the deficiencies, drawbacks and infirmities pointed out in the evidence as a whole and evaluate them to find out whether it is against the general tenor

of the evidence given by the witness and whether the earlier evaluation of the evidence is shaken as to render it unworthy of belief. Minor discrepancies on trivial matters not touching the core of the case, hyper-technical approach by taking sentences torn out of context here or there from the evidence, attaching importance to some technical error committed by the investigating officer not going to the root of the matter would not ordinarily permit rejection of the evidence as a whole. If the court before whom the witness gives evidence had the opportunity to form the opinion about the general tenor of evidence given by the witness, the appellate court which had not this benefit will have to attach due weight to the appreciation of evidence by the trial court and unless there are reasons weighty and formidable it would not be proper to reject the evidence on the ground of minor variations or infirmities in the matter of trivial details.

15. To the same effect is the decision in State of Punjab v. Jagir Singh [(1974) 3 SCC 277 : 1973 SCC (Cri) 886 : AIR 1973 SC 2407] and Lehna v. State of Haryana [(2002) 3 SCC 76 : 2002 SCC (Cri) 526] .

Stress was laid by the accused-appellants on the non-acceptance of evidence tendered by some witnesses to contend about desirability to throw out the entire prosecution case. In essence prayer is to apply the principle of “falsus in uno, falsus in omnibus” (false in one thing, false in everything). This plea is clearly untenable. Even if a major portion of the evidence is found to be deficient, in case residue is sufficient to prove guilt of an accused, notwithstanding acquittal of a number of other co-accused persons, his conviction can be maintained. It is the duty of the court to separate the grain from the chaff. Where chaff can be separated from the grain, it would be open to the court to convict an accused

notwithstanding the fact that evidence has been found to be deficient to prove guilt of other accused persons. Falsity of a particular material witness or material particular would not ruin it from the beginning to end. The maxim “falsus in uno, falsus in omnibus” has no application in India and the witnesses cannot be branded as liars. The maxim “falsus in uno, falsus in omnibus” has not received general acceptance nor has this maxim come to occupy the status of rule of law. It is merely a rule of caution. All that it amounts to, is that in such cases testimony may be disregarded, and not that it must be disregarded.”

71. மேற்படி தீர்வு முடிவுகளிலிருந்து, ஒரு சாட்சி சில விரங்களைப் பொறுத்து மிகைப்படுத்தியோ, அல்லது குறைவாகவோ சாட்சியமளிப்பதால் அவரது முழு சாட்சியமும் பொய்யென கருத முடியாது என்பதும், ஒரே ஒரு கண்ணுற்ற சாட்சியின் சாட்சியம் தெளிவாகவும், ஏற்கும் வகையிலும் இருக்கும் நிலையில் அதனடிப்படையில் அரசுத்தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டதாக கருத முடியம் என்பது தெரிகிறது. எனவே, கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 ஐ எதிரி தரப்பில் மிக நீண்ட குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. எனவே, அவரது சாட்சியத்திலுள்ள சிறு முரண்பாடுகள், அரசுத்தரப்பு வழக்கின் அடிப்படையையே பாதிக்கும் வகையில் அமையவில்லையென முடிவு செய்யப்படுகிறது.

72) இந்த வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான, இறந்தவரின் தந்தையான அ.சா.1 ஆண்டிச்சாமியின் சாட்சியம், சம்பவம் தொடர்பாகவும், எதிரிக்கும், தன் மகனுக்குமிடையே சம்பவ இடத்தில், நடந்த சண்டை தொடர்பாகவும், எதிரி தன் மகனை வெட்டியது தொடர்பாகவும், அதற்கு எதிரி பயன்படுத்திய அருவாள்தான்

அ.த.சா.பொ.1 என்றும், அந்த பைக்கை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும் என்றும் குறிப்பிட்டு, எதிரியின் குற்றச்செய்கை தொடர்பாக தெளிவாக சாட்சியமளித்துள்ளார். அவரை நீண்ட குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதும், அதில், பெரிய முரண்பாடுகள் முன்கொணரப்படவில்லை. எனவே, அ.சா.1ன் சாட்சியம் இயல்பாகவும், தெளிவாகவும், ஏற்கும் வகையிலும் அமைந்துள்ளது. அவரது சாட்சியத்தை அனுசரிக்கும் வகையில் இறந்துபோன பழனிச்சாமிக்கு சிகிச்சையளித்த அ.சா.7 டாக்டர் பிரபாகரன் மற்றும் அ.சா.11 டாக்டர் வினோதா ஆகியோரின் சாட்சியங்கள் உறுதிப்படுத்தும் வகையில் உள்ளது. இறந்தவருக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பாகவும், இறப்பு தொடர்பாகவும் சாட்சியமளித்த இறந்தவரின் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவரின் சாட்சியமும் அ.சா.1ன் சாட்சியத்தை உறுதி செய்யும் வகையில் உள்ளது.

73) அ.சா.8 கிராம நிர்வாக அலுவலர் சிவராஜ் என்பவர், எதிரி தன்னிடம் சரணடைந்து, தான் ஒருவரை வெட்டி விட்டதாகவும், அந்த காயத்தின் காரணமாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, இறந்து விட்டதாகவும் கூறியதால், அவரை துவரங்குறிச்சி, காவல்நிலையத்தில் ஆஜர்படுத்தியதாக சாட்சியமளித்துள்ளார். ஆனால், அவர் எதிரியிடம் நீதித்துறை சாரா ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பின்னிட்டு, ஆய்வாளரிடம் எதிரி தன் முன்பாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதனடிப்படையில் தானும், தனது உதவியாளரும் கம்பிளியாம்பட்டிக்கு சென்று, அங்கு எதிரி அவரது மாட்டுக்கொட்டகையில் சொருகியிருந்த அருவாளை எடுத்து ஆஜர்

செய்ததாகவும், கருப்பு கலர் பல்சரையும், இரத்தக்கரை படிந்த வெள்ளை கலர் சட்டையையும், எதிரி ஆஜர் செய்ததாகவும், அவற்றை ஆய்வாளர் தங்கள் முன்பாக கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

74) மேற்படி கம்பிளியாம்பட்டி, திண்டுக்கல் மாவட்ட எல்லையில் உள்ளதாகவும், அங்கு வேறு ஒரு கிராம நிர்வாக அலுவலர் இருப்பதாகவும், அவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், எதிரி தரப்பில் ஒரு வாதம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அதன் காரணமாகவே, அ.சா.8 கிராம நிர்வாக அலுவலரின் சாட்சியத்தை நிராகரிக்க முடியாது. மேலும், அவர் முன்னிலையில், எதிரியிடம் கைப்பற்றப்பட்ட அருவாளில் மனித ரத்தம் இருந்துள்ளது என்பது அ.த.சா.ஆ.19 சிராலஜி அறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த அருவாளால் தான் தன் மகனை எதிரி தாக்கியதாக அ.சா.1 உறுதி செய்துள்ளார். இதுவும் எதிரி மீதான அரசுத்தரப்பு வழக்கை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளது.

75) எதிரி தரப்பில் பழனிவேல் என்பவர் எ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் இறந்துபோனவருக்கு வேறு சில தவறான பழக்கங்கள் இருந்ததாகவும், சில பெண்களிடம் வம்பிழுத்துக்கொண்டிருப்பார் என்றும் கூறியுள்ளார். ஆனால், அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து, வேறு நபர்களால்தான், இந்த சம்பவம் நடத்தப்பட்டிருக்கலாம் என்ற எதிரி தரப்பு கூற்று ஏற்புடையதாக இல்லையென முடிவு செய்யப்படுகிறது.

76) இறந்தவருக்கு முதல் உதவி சிகிச்சையளித்த மருத்துவர் விபத்துப்பதிவேட்டில் அடையாளம் தெரியாத நபரால் பழனிச்சாமிக்கு வெட்டுப்பட்டதாக குறிப்பிட்டிருப்பதாகவும், எனவே, எதிரி அ.சா.1 க்கு – அவ்வாறு கூறியிருக்க வாய்ப்பில்லை என்றும் ஒரு வாதம் மேற்கொள்ளப்பட்டது. இதுபோன்ற சூழ்நிலையில், பின்வரும் சமீபத்திய தீர்வு முடிவில், மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை அமர்வு டிவிஷன் பெஞ்ச், கீழ்கண்டவாறு தீர்மானித்துள்ளது.

In **Muthukumar Vs. The State** rep by The Inspector of Police, Parthibanoor Police Station, Ramanathapuram District in Crl. A. (MD)No.123 of 2024 on 25.03.2026, the Hon'ble Division Bench of Madurai Bench of Madras has held as follows:-

31. The evidence of PW1 and PW2 is sought to be discredited by relying upon the evidence of PW8 – Doctor, who recorded the entries in the accident register Ex.P9. The Doctor, while deposing and while making the entries, has stated that the deceased was in a position to talk and she stated that her husband (accused herein) was the one, who attacked her with knife.

While making this statement, she seems to have told that she was working in the house and at that time, she was attacked. Considering the serious condition of the deceased and considering the fact that a Doctor will only focus on giving treatment to the person, who is in a critical condition, every other entry made in the Accident Register cannot be taken to be a gospel truth and it cannot be pitted against the unassailable eyewitness account to

disbelieve the same. In fact, the evidence of PW8 and the Accident Register only helps the prosecution to substantiate the fact that it was the accused person who attacked the deceased, which resulted to be fatal and where and what time it took place will all be irrelevant, insofar the reliance placed on the accident register is concerned. By no stretch, the entries made in an accident register and which is spoken to by a Doctor can be used to completely discredit an eyewitness account, which is otherwise unassailable.

77) மேற்கண்ட மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்வு முடிவிலிருந்து, காயம்பட்டவருக்கு, சிகிச்சையளிக்கும் மருத்துவர் சிகிச்சையளிக்கும்போது, சிகிச்சையளிக்கும் நடைமுறையிலேயே பெரிதும் கவனம் செலுத்துவார் என்பதாலும், அதில், அவர் அடையாளம் தெரியாத நபர் தாக்கியதால் காயம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டதாக, விபத்துப் பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாலேயே, இந்த வழக்கில், கண்ணுற்ற சாட்சியான அ.சா.1ன் சாட்சியத்தை நிராகரிக்க முடியாது என முடிவு செய்யப்படுகிறது.

78) மேலும், மேற்படி மருத்துவர்கள் தங்களது சாட்சியத்தில், அருவாள் போன்ற ஆயுதத்தால் ஒருவரை தாக்கும்போது அவருக்கு இறப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதை உறுதி செய்துள்ளனர். எனவே, இறந்தவரின் தந்தையான அ.சா.1, தன் மகனை வெட்டியவரை விட்டுவிட்டு, தன் கொழுந்தியா மகனான எதிரியை பொய்யாக, இந்த வழக்கில் சேர்த்து சாட்சியமளிக்க எந்த காரணமும் இல்லை. மேற்படி குற்றச்சம்பவத்தைப் பொறுத்து அ.சா.1ன் சாட்சியம்

இயல்பாகவும், தெளிவாகவும், ஏற்கும் வகையிலும் அமைந்துள்ளது. மருத்துவர்களின் சாட்சியம் அதை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. மேலேவிவரித்த இதர சந்தர்ப்பங்களும் அரசுத்தரப்பு வழக்கை உறுதியூட்டும் வகையில் அமைந்துள்ளது.

79) எனவே, மேலே விவரித்தபடி, எதிரி மீதான இதச பிரிவு 302–ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரி இதச பிரிவு 302–ன் கீழ் குற்றவாளி என கு.வி.மு.ச. 235(2)/258(2)BNS–ன் படி தீர்மானிக்கப்படுகிறது. மேற்படி இதச பிரிவு 302 ன் படி, எதிரிக்கு வழங்கவிருக்கும் தண்டனை தொடர்பாக எதிரியிடம் வினவப்பட்டது. அதற்கு எதிரி கீழ்கண்டவாறு பதிலளித்தார்.

"எதிரி தான் குற்றவாளியல்ல என்றும், தற்போது

தான் தனியாக வசிப்பதாகவும் கூறினார்."

80) எதிரியின் கோரிக்கை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. இந்த வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை கருதி, எதிரிக்கு, பின்வருமாறு சிறை தண்டனையும், அபராதமும், விதிக்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது.

**81) முடிவாக,**

1) எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 302–ன் கீழான குற்றச்சாட்டு, அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்யப்படுகிறது.

2) எனவே. எதிரி இதச பிரிவு 302 –ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, கு.வி.மு.ச. 235(2)/258(2)BNS ன்படி, அவருக்கு வழங்க இருக்கும் தண்டனை பற்றி வினவி, எதிரியின் கோரிக்கையை பரிசீலித்து, எதிரி மீது நிரூபிக்கப்பட்ட, இதச பிரிவு 302 கீழான குற்றத்திற்காக, எதிரிக்கு **கடுங்காவல் ஆயுள் சிறைத்தண்டனை**யும், மேலும், **ரூ.5000/–** அபராதமும் தண்டனையாக விதிக்கப்படுகிறது. மேற்படி, அபராதத் தொகையை எதிரி செலுத்த தவறினால் அவர் கூடுதலாக **6** மாதங்கள் கடுங்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டுமென கு.வி.மு.ச. 235(2)/258(2)BNS–ன்படி உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் **ரூ.5000/–**.

3) இந்த வழக்கில், எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த காலத்தை, கு.வி.மு.ச. பிரிவு 428/468 BNS ன் கீழ் கழித்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

4) இவ்வழக்கில் எதிரி தரப்பில் பிணைப்பத்திரம் ஏதும் எழுதி தரப்பட்டிருந்தால், அவற்றை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

5) அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.6 ஆகியவற்றை மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு, அழிக்க உத்தரவிடப்படுகிறது.

6) இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தடயப்பொருளான PY 01 BP 9270 என்ற பதிவெண் கொண்ட கருப்புநிற பல்சர் இருசக்கர வாகனத்தை ஏற்கனவே மணப்பாறை, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில், அதன் பதிவு உரிமையாளர் CRLMP.1589/2020 மூலம் நாள் 21.08.2020 அன்று பிணைப்பத்திரம் எழுதிக் கொடுத்து இடைக்காலமாகப் பெற்றுச் சென்றுள்ளதால் அதனை அவரே வைத்துக்கொள்ளவும் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் பிணைப்பத்திரத்தை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு, பின்னர் விரிவாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் நாள் வெள்ளிக்கிழமை என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

SARAVANAN B

Digitally signed by SARAVANAN B
Date: 2026.06.19 18:21:45 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**

**திருச்சிராப்பள்ளி.**

**<u>இணைப்பு</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | ஆண்டிச்சாமி |
| அ.சா.2 | – | அடைக்கம்மாள் |
| அ.சா.3 | – | பாலமலை |
| அ.சா.4 | – | பழனிச்சாமி |
| அ.சா.5 | – | பாலமுருகன் |
| அ.சா.6 | – | பழனி |
| அ.சா.7 | – | பிரபாகரன் (மருத்துவர்) |
| அ.சா.8 | – | சிவராஜ் (கிராம நிர்வாக அதிகாரி) |
| அ.சா.9 | – | கனகஸ்ரீ (மருத்துவர்) |
| அ.சா.10 | – | ஆசியா( முதல்நிலைக் காவலர்) |
| அ.சா.11 | – | வினோதா (மருத்துவர்) |
| அ.சா.12 | | ஆனந்தராஜ் (2 ம் நிலைக் காவலர்) |
| அ.சா.13 | – | ரவிசந்திரன்(உதவி ஆய்வாளர்) |
| அ.சா.14 | – | ஜெயதேவி (ஆய்வாளர்) |
| அ.சா.15 | – | பாலாஜி(ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | – | புகார் |
| அ.த.சா.ஆ.2 | – | பார்வை மகசர் |
| அ.த.சா.ஆ.3 | – | கைப்பற்றுதல் மகசர் |
| அ.த.சா.ஆ.4 | – | விபத்து பதிவேடு |
| அ.த.சா.ஆ.5 | – | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.த.சா.ஆ.6 | – | கைப்பற்றுதல் மகசர் |
| அ.த.சா.ஆ.7 | – | கிராம நிர்வாக அதிகாரியின் அறிக்கை |
| அ.த.சா.ஆ.8 | – | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.த.சா.ஆ.9 | – | விசரா அறிக்கை |
| அ.த.சா.ஆ.10 | – | இறுதி கருத்துரை |
| அ.த.சா.ஆ.11 | – | விபத்து பதிவேடு |
| அ.த.சா.ஆ.12 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.13 | – | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.14 | – | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |
| அ.த.சா.ஆ.15 | – | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.த.சா.ஆ.16 | | படிவம் 91 (2 எண்ணிக்கை) |
| அ.த.சா.ஆ.17 | – | வேதியியல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.18 | – | பயாலஜி அறிக்கை |

அ.த.சா.ஆ.19 – செராலஜி அறிக்கை

**அரசு தரப்பு சான்றுப்பொருள்கள்:–**

சா.பொ.1 அருவாள்–1

சா.பொ.2 இரத்தம் படிந்த மண் சிறிதளவு

சா.பொ.3 இரத்தம் படியாத மண் சிறிதளவு

சா.பொ.4 இரத்தக்கறை படிந்த வெள்ளை 1/2 கை சட்டை–1

சா.பொ.5 கிழிந்த ஊதா வெள்ளை கட்டம் போட்ட கைலி–1

சா.பொ.6 இரத்தக்கறை படிந்த வெள்ளை கலர் சட்டை–1

**எதிரி தரப்பு சாட்சிகள்:–**

எ.சா.1 பழனிவேல்

**எதிரி தரப்பு சான்றாவணங்கள் :– இல்லை**

SARAVANAN B Digitally signed by SARAVANAN B
Date: 2026.06.19 18:21:54 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**